ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய

ஸ்ரீ கமலாம்பா நவாவரண கீர்த்தனைகளின் அற்புதப் பலன்கள்

எம்.கே.வெங்கடராமன்

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய

ஸ்ரீ கமலாம்பா

நவாவரண கீர்த்தனைகளின் அற்புதப் பலன்கள்

(ஸம்ஸ்க்ருத, தமிழ் க்ருதிகளுடன்)

லிப்கோ ஸ்தாபகர் சர்மாஜி நூற்றாண்டு வெளியீடு

விளக்கவுரை

"நவரத்னமாலா" M.K. வெங்கடராமன், M.A.

பதிப்பகத்தார்

லிப்கோ பப்ளிஷர்ஸ் (பி.) லிட்.,

புதிய எண் 36, வடக்கு சாலை, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை - 600 035.

தொலைபேசி : 24341538, 24336467, தொலைநகலி : 044-24310659

E-mail : info@lifcobooks.com ❖ Website : www.lifcobooks.com

லிப்கோ புத்தகங்கள் கீழ்க்காணும் இடங்களிலும் கிடைக்கும்:

சென்னை : 1. லிப்கோ அஸோஸியேட்ஸ்,

"நாராயணா அபார்ட்மெண்ட்ஸ்", 23/G-5, ராமேஸ்வரம் ரோடு,

தி.நகர், சென்னை - 600 017. தொலைபேசி : 24323298

2. எம் தாமோதரம் & கம்பெனி,

15, அம்பர்ஸன் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 108.

திருச்சி : லிப்கோ பப்ளிஷர்ஸ் (பி.) லிட்.,

17/1, நந்திகோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 620 002.

ஹிக்கின்பாதம்ஸ், மற்றும் பிரபல புத்தக வியாபாரிகள்.

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	:	ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய ஸ்ரீ கமலாம்பா நவாவரண கீர்த்தனைகளின் அற்புதப் பலன்கள்
ஆசிரியரின் பெயர்	:	"நவரத்னமாலா" **M.K. வெங்கடராமன், M.A.,**
உரிமை	:	பதிப்பகத்தாருக்கு
பொருள்	:	பாட்டு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு - 2007 **மறு அச்சு** 2011
நூலின் அளவு	:	டெம்மி 1 X 8
தாள்	:	60 Gsm
அச்செழுத்து	:	12 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	84 பக்கங்கள்
வெளியீடு	:	தி லிட்டில் ப்ளவர் கம்பெனி புதிய எண் 36, வடக்கு சாலை மேற்கு சி.ஐ.டி. நகர் சென்னை - 600 035
பைண்டிங்	:	சாதா பைண்டிங்
கணிப்பொறி அச்சு	:	ஸ்ரீ சாய் சுஜா என்டர்பிரைசஸ் பூவிருந்தவல்லி, சென்னை - 600 056 98406 74604
அச்சு	:	சங்கர் பிரிண்டர்ஸ் (பி) லிட். சென்னை - 600 042
நூலின் விலை	:	**ரூ. 35.00**

முன்னுரை

தமிழ் நாட்டின் பொக்கிஷங்களான ஸங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர். கர்நாடக இசையிலும் ஸம்ஸ்க்ருதத்திலும் புலமை வாய்ந்த, அந்த ஸாஹித்யகர்த்தா திருவாரூர் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ கமலாம்பிகையின் பேரில் இயற்றிய ஒன்பது கீர்த்தனைத் துதிகளே "நவாவரணக் கிருதிகள்" என்ற பிரசித்தமான இசைக் கீர்த்தனங்கள். இனிய இசைக்கு ஏற்ப, ஸம்ஸ்க்ருதத்தின் நளினமான சொல் பிரயோகங்களுடனும், அர்த்தபுஷ்டியான பதங்களுடனும், அற்புதமான தெய்வீக சக்திகளுடனும் இவைகள் வலம் வருகின்றன. திருத்தணியில் ஸ்ரீ முருகப் பெருமானே, குருகுஹனாகத் தோன்றி அவர் வாயில் கற்கண்டுப் பிரஸாதத்தை அளித்து அவரை ஆட் கொண்டிருந்ததால், அவருடைய ஸாஹித்யங்கள் கற்கண்டாகவே இனிக்கின்றன என்பதில் எந்த வியப்பும் இல்லை.

அன்னை பராசக்தியின் பலவிதமான உபாஸனைகளில் யந்த்ர-தந்த்ர-மந்த்ர பிரயோகங்கள் அனுசரிக்கப்படுகின்றன. ஸ்ரீ வித்யா உபாஸனையில், ஸ்ரீ சக்ர யந்த்ரத்திற்கு செய்யப்படும் நவாவரண பூஜை மகத்துவம் வாய்ந்தது. ஸ்ரீ வித்யா உபாஸனை முறைகள் ரஹஸ்யமாகவும், குருசிஷ்ய பாரம்பர்யமாகவும், கடினமான நியம நிஷ்டைகளுடனும் அனுசந்திக்கப்படுகின்றன.

மேலும் தகுதிவாய்ந்த குருவிடமிருந்து மந்த்ரோபதேசம் பெற்றுக் கொள்ளவேண்டும். இவைகளைப் பின்பற்ற பெரும்பாலான பக்தர்களுக்கு சாத்தியம் இல்லை. இப்படிப்பட்ட மக்களுக்கும் ஸாங்கோபாங்கமான நவாவரணப் பூஜாவிதானத்தின் பலன்கள் சுலபமாக கிட்டவேண்டும் என்ற கருணையுள்ளத்தில் ஸ்ரீ தீக்ஷிதர் இந்த கீர்த்தனைகளை இயற்றியுள்ளார் என்பது திண்ணம்.

ஸ்ரீ சக்ரயந்த்ரத்தின் பல அம்சங்கள், முக்கியமாக, ஆவரணங்கள், சக்ரங்கள், யோகினீ தேவியர்கள், சக்தி தேவியர்கள் அவர்கள் அருள் பாலிக்கும் வரங்கள், மந்த்ர சாஸ்த்ர நுட்பங்கள் முதலான பல ரஹஸ்ய விஷயங்கள் அநேகம் இந்த கிருதிகளில் பொதிந்து கிடக்கின்றன. ஆகையால் ஒவ்வொரு கீர்த்தனையும் அளப்பரிய மந்த்ரசக்தி பிரபாவங்களைக் கொண்டிருப்பதால், அமோகமான பலன்களை வழங்குகின்றன.

இந்த கீர்த்தனைகள் ஸங்கீதம் மூலமாகத்தான் ப்ராபல்யம் அடைந்துள்ளன என்றாலும், இவற்றின் ஸாஹித்ய மகத்துவங்கள் இசை அம்சத்திற்கு சற்றும் குறைந்தவைகள் இல்லை. அவற்றின் மூலம்தான் பக்திபாவம் நன்றாக மிளிரச் செய்யப்படுகிறது. வேதங்கள், காவ்யாலங்கார சாஸ்த்ரம், வ்யாகரணம், வேதாந்தம், மந்த்ர சாஸ்த்ரம் ஆகியவற்றில் ஸ்ரீ தீக்ஷிதரின் ஆழ்ந்த புலமை, ஸாஹித்யங்களில் பளிச்சிடுகிறது. இவற்றில் இருக்கும் அபூர்வமான பல இலக்கிய நயங்களில் ஒன்றை குறிப்பிடுவதானால், "கமலாம்பா" என்ற பெயர்ச்சொல் அந்தந்த ஆவரண எண்ணிக்கைக்கு ஏற்ப அந்தந்த வேற்றுமையிலேயே வருகின்றன. உதாரணமாக, இரண்டாவது ஆவரண கீர்த்தனம் "கமலாம்பாம் ரே மானஸ" என்று தொடங்கி இரண்டாவது வேற்றுமையிலேயே அமைந்திருக்கிறது. அதாவது, அந்தந்த கீர்த்தனையில் வரும் வேற்றுமைப் பிரயோகமே, அந்தந்த ஆவரணத்தின் ஸங்க்யையை ஸூசகப்படுத்துகிறது. இது ஒரு நுட்பமான, ஸ்வாரஸ்யமான இலக்கிய, இலக்கண அம்சம்.

இந்த கீர்த்தனைகளில் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தபுஷ்டி, பக்தி ப்ரபாவம், மந்த்ர ப்ரபாவம் இருப்பதனால், ஸங்கீத வித்வான்கள், பாடகர்கள், மாணாக்கர்கள் அனைவரும் இந்த அம்சங்களை நன்கு புரிந்துகொண்டு, அவற்றை உணர்ந்து, தானும் அனுபவித்து, பிறரையும் அனுபவிக்கச் செய்யவேண்டும். ஆகையால் வார்த்தைகளை முழுமையாகவும், புரியும்படியாகவும், பூர்ணபக்தி பாவத்துடனும் நன்றாக வாய்விட்டுப் பாடவேண்டும். அந்த வகையில், இந்த விளக்கவுரை நூல் அவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

இந்த நூல் பலதரப்பட்ட இதர மக்களுக்கும் நிச்சயம் பயன்படும் என்று சொல்லத் தேவையில்லை ஸ்ரீ வித்யா உபாஸகர்களுக்கு இது ஒரு சிறந்த வழித்துணையாகும். மந்த்ரோபதேசம் பெறாத பக்தர்களுக்கு நவாவரண பூஜை செய்ததற்கு ஒப்பான பலன்கள் நிச்சயம் கிட்டும். இசை ஞானம் இல்லாதவர்கள்கூட, கீர்த்தனைகளின் உட்பொருள்களை உணர்ந்துகொண்டு, பராசக்தி அன்னைக்கு ஒரு துதியாகக் கருதி படனம் செய்து அமோகமான பலன்களைப் பெறலாம். ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களே தம்முடைய பல சீடர்களுக்கு இந்த பாராயண முறையையே (அதாவது கானம் செய்ய முடியாதவர்களுக்கு) அறிவுறுத்தியதாகத் தெரிகிறது.

நவராத்ரியில் நவாவரண பூஜைகள் அமோகமான பலன்களை அளிக்கும் என்று கூறப்படுகிறது. அவற்றிற்குப் பதிலாக இந்த

நவாவரண கீர்த்தனைகளை கானம் செய்தோ, பாராயணம் செய்தோ அதே பலன்களை சுலபமாக பெற்றுவிடலாம் என்று காலம்காலமாக ஒரு நம்பிக்கை இருந்துவருகிறது. ஆகையால், இந்த நூல் இப்படிப் பட்ட திருவிழா நாட்களில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதைத் தவிர, வெள்ளிக்கிழமைகளிலோ, பௌர்ணமி, அஷ்டமி போன்ற திதிகளிலோ (அதாவது அம்பாளுக்கு உவந்த நாட்கள், திதிகள்) இந்த கீர்த்தனைகளை கானம் செய்தோ, படனம், பாராயணம் செய்தோ அம்பாளின் அனுக்ரகத்திற்குப் பாத்திரமாகிவிடலாம். பிறர் கானம் செய்ய, மற்றவர்கள் அதை சிரவணம் செய்தாலும் புண்ணியம் உண்டு. இந்த விஷயத்தில் நல்ல காஸெட்டுகள் (DVD, VCD, etc.) கிடைத்தால், அவற்றின் மூலமாக சிரவணம் செய்வதிலும் எந்தத் தவறும் இல்லை. பொதுவாக, எந்த முறையைப் பின்பற்றினாலும் ஸாஹித்யத்தின் முழு அர்த்தத்தை யும் நன்றாகப் புரிந்துகொண்டால்தான் உண்மையான, முழுப் பலன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு கீர்த்தனத்திற்கும் அமோகமான சக்திகள், ப்ரபாவங்கள், பல சித்திகள் இருக்கின்றன. அவைகள் உண்மையில் பலிக்குமா என்று பலர் ஐயப்படலாம். எந்த அளவுக்கு திடமான பக்தி, நம்பிக்கை, ச்ரத்தை முதலானவைகள் இருக்கின்றனவோ அந்த அளவு வரையில்தான் பலன்களை எதிர்பார்க்கலாம். ஆனாலும் நியாயமான, தேவைகளுக்கேற்ப, எளிய விருப்பங்கள், கோரிக்கைகள் எதுவானாலும் அவைகள் நிச்சயம் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

இந்த கீர்த்தனைகள் ஸ்ரீ கமலாம்பாளை முன்னிட்டு எழுதப் பட்டிருந்தாலும் ஸ்ரீ காமாக்ஷி, ஸ்ரீ மீனாக்ஷி, ஸ்ரீ கற்பகாம்பாள் முதலான அனைத்து அர்ச்சாமூர்த்திகளுக்கும், பொருந்தக் கூடியதே என்பதனை நினைவு கொள்ளவேண்டும்.

இந்நூலை நான் எழுதுவதற்குக் காரணமான ஸ்ரீமதி வஸுதா முரளி (LIFCO) அவர்களுக்கும், அவருடைய ஸங்கீத ஆசிரியை, மதிப்பிற்குரிய ஸ்ரீமதி பத்மா ராஜசேகரன் அவர்களுக்கும் நானும் ஆஸ்திகப் பெருமக்கள் அனைவரும் நன்றியுள்ளவர்களாவோம்.

— "நவரத்னமாலா" M.K. வெங்கடராமன்

॥ ஸ்ரீ: ॥

श्रीचक्रम्

ஸ்ரீ சக்ரம்



बिन्दु - त्रिकोण - वसुकोण - दशारयुग्म -
मन्वश्र - नागदल - संयुत - षोडशारम् ।
वृत्तत्रयं च धरणीसदनत्रयं च
श्रीचक्रमेतदुदितं परदेवतायाः ॥

பிந்து - த்ரிகோண - வஸுகோண - தஶாரயுக்ம
மன்வஶ்ர - நாகதள - ஸம்யுத - ஷோடஶாரம் ।
வ்ருத்தத்ரயம் ச தரணீஸதன த்ரயம் ச
ஸ்ரீசக்ரமேததுதிதம் பரதேவதாயா: ॥

(இந்த ஸ்ரீ சக்ரம் பராசக்தியினுடையதாகும். இதன் முக்கிய அம்சங்கள் (உள்ளேயிருந்து வெளியே). பிந்து, முக்கோணம், எண்முக்கோணம், பத்துமுக்கோணங்கள் இரண்டு, பதினாலுமுக்கோணம், எட்டு இதழ் வட்டம், பதினாறு இதழ் வட்டம், மூன்று சுற்று மேகலை, மூன்று கோடுகளைக் கொண்ட பூபுரச் சதுரம் ஆகியவைகளால் ஆன ஒன்பது ஆவரணங்கள்.

ஸ்ரீசக்ரத்தின் ஒன்பது ஆவரணங்கள்

(1)



த்ரைலோக்ய
மோகன சக்ரம்

(2)



ஸர்வாசா
பரிபூரக சக்ரம்

(3)



ஸர்வஸம்க்ஷோபண
சக்ரம்

(4)



ஸர்வ ஸௌபாக்ய
தாயக சக்ரம்

(5)



ஸர்வார்த்த ஸாதக
சக்ரம்

(6)



ஸர்வ ரக்ஷாகர
சக்ரம்

(7)



ஸர்வ ரோக ஹர
சக்ரம்

(8)



ஸர்வ ஸித்திப்ரத
சக்ரம்

(9)



ஸர்வானந்தமய
சக்ரம்

ஸ்ரீசக்ரத்தின் பிரபாவமும் ஒன்பது ஆவரணங்களின் விபரங்களும்

அன்னை பராசக்தியின் வழிபாடான ஸ்ரீவித்யா உபாஸனையில் ஸ்ரீசக்ரம் பிரதானமான பங்கை வகிக்கிறது. இதில் மந்த்ர-தந்த்ர- யந்த்ர அம்சங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்திருக் கின்றன. வரிவடிவமாக இருப்பதால், இது, ஸகுணப்ரஹ்மத்தின் உருவத்தன்மையையும் (ஸாகாரம்) நிர்க்குண ப்ரஹ்மத்தின் அருவத் தன்மையையும் (நிராகாரம்) குறிக்கின்றது. உபாஸகனின் பக்தி சாதனைகளின் மூலம் இந்த ஸ்ரீசக்ரத்தில் அமோகமான தெய்வீக, ஆன்மீக சக்திகள் அனைத்தும் ஒன்றுகுவிந்து, பிற்பாடு, அந்த சக்திகளின் கதிர் இயக்கங்கள் மூலம் (radiation) சுற்றிலும் அவற்றின் அதிர்வு அலைகள் (vibration) பரப்பப்படுகின்றன. இப்படிப்பட்ட அபூர்வமான அனுபவங்களை நமது முன்னோர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இதன் காரணமாக, பக்தர்கள் அமோகமான பலப்பல பயன்களை எய்தியிருக்கிறார்கள்.

ஸ்ரீசக்ரத்தில் ஒன்பது சுற்றுகள் (blocks), ஒவ்வொன்றும் வித்தியாசமான வடிவில் (சதுரம், வட்டங்கள், அறுகோணங்கள், முக்கோணங்கள்) இருக்கின்றன. நடுவில் கேந்திரஸ்தானத்தில் புள்ளி வடிவில் பிந்து என்ற பராசக்தியின் பீடம் இருக்கிறது. இந்த ஒன்பது சுற்றுகளே "ஆவரணங்கள்" என்றழைக்கப்படுகின்றன. இவைகள் ஒன்பதும் ஒரு கோவிலின் ஒன்பது சுற்றுப் பிராகாரங்களைப் போன்றவைகள். கோவிலின் கர்ப்பக்ரஹ (கருவறை) ஸ்தானத்தில் பிந்து இருக்கிறது. ஒன்பது பிராகாரங்களைக் கொண்ட ஒரு ஆலயத்தில் ஒவ்வொரு பிராகாரமாக உள் நுழைந்து வலம் வந்து முடிவில் கர்ப்பக்ரஹத்திற்குச் சென்று அங்கே மூல விக்ரகத்தை தரிசிக்கிறோம் அல்லவா? அதே போன்று, இந்த ஒன்பது ஆவரணங்களையும் கடந்து, உள்ளே பிந்து ஸ்தானத்தில், அன்னை பராசக்தி சிவசக்தி ஐக்கிய ஸ்வரூபமாக, சிவகாமேசுவரியாக எழுந்தருளியிருக்கிறாள். ஒவ்வொரு ஆவரணத் திலும் அன்னையின் பரிவார தேவியர்கள், யோகினியர்கள் - சக்தி தேவியர்கள் என்ற பெயரில் நிலைகொண்டிருக்கிறார்கள். இந்த யாந்த்ரீக விஷயங்களைத்தான் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் நவாவர்ணக் கீர்த்தனை களில் சுருக்கமான குறியீடுகளாக காண்பித்திருக்கிறார்.

ஸ்ரீசக்ரத்தின் உள்ளே, மேல் நோக்கியபடி 4 முக்கோணங் களும், கீழ் நோக்கியபடி 5 முக்கோணங்களும் இருக்கின்றன. மேல் நோக்கிய

முக்கோணங்கள் சிவஸ்வரூபமாகவும், கீழ் நோக்கிய முக்கோணங்கள் சக்தி ஸ்வரூபமாகவும் கருதப்படுகின்றன. இந்த முக்கோணங்கள் ஒன்றோடு ஒன்று கூடி 43 சிறிய முக்கோணங்களைத் தோற்றுவிக்கின்றன. இவைகள் அனைத்தும் அன்னையின் பரிவார தேவதைகளான சக்திதேவியர்களின் பீடங்களாகும்.

ஒன்பது ஆவரணங்களின் விவரங்கள் வரிசைக்ரமமாக கீழே கொடுக்கப்படுகின்றன. ஆவரணங்களின் வடிவங்கள் அந்தந்த கீர்த்தனத்தோடு அங்கங்கே இணைக்கப்பட்டு சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

1. முதல் ஆவரணம் :

ஸ்ரீசக்ரத்தின் முதல் வெளிச்சுற்று மூன்று இணை கோடுகளால் ஆன சதுரஸ்ரமானது, அதாவது, ஹோம குண்டத்தைப் போன்று சதுர வடிவமானது. இதுவே "ஸ்ரீபுரம்" (அல்லது "த்ரிபுரம்") என்று அறியப்படுகிறது. இதுவே **"த்ரைலோக்ய மோகன சக்ரம்"** என்றும் கூறப்படுகிறது. இதன் யோகினிதேவதையின் பெயர் "ப்ரகட யோகினீ". இதில் குடிகொண்டிருக்கும் சக்தி தேவியர்கள் அனந்தம்.

2. இரண்டாவது ஆவரணம் :

வட்டவடிவமான இணைக்கோடுகளின் உள்ளே ("மேகலை" என்ற concentric circlesகளின் உள்ளே) 16 தளங்களைக் கொண்டு பதினாறு இதழ் தாமரையைப் போன்றது. (ஷோடச தளபத்மம்). இந்த பதினாறு இதழ்களும் பதினாறு சக்தி தேவியர்களின் ஸ்தானங்கள். இந்த ஆவரணமே **"ஸர்வாசா பரிபூரக சக்ரம்"** என்றும் கூறப்படுகிறது. இதன் அதிஷ்டான யோகினீ தேவதை **"குப்த யோகினீ"** யாவாள்.

3. மூன்றாவது ஆவரணம் :

இது எட்டு இதழ்களைக் கொண்ட தாமரையைப் போன்று வட்ட வடிவமானது. (அஷ்டதள பத்மம்). இதன் எட்டு இதழ்களும் எட்டு சக்தி தேவியர்களின் பீடங்களாகும். இந்த ஆவரணத்தின் பெயர் **"ஸர்வஸம்க்ஷோபண சக்ரம்"**. இதன் யோகினீ தேவதையின் பெயர் **"குப்த தரயோகினீ"**.

4. நான்காவது ஆவரணம் :

இது பதினான்கு சிறு முக்கோணங்களால் சூழப்பட்ட அறுகோணம் (Hexagon) இந்த பதினான்கு சுற்றுக் கோணங்களில் சக்தி தேவியர்கள்

நிலைகொண்டுள்ளார்கள். இந்த ஆவரணத்தின் பெயர் "**ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரம்**". இதன் யோகினீ தேவதையின் பெயர் "**ஸம்ப்ரதாய யோகினீ**".

5. ஐந்தாவது ஆவரணம் :

இது; பத்து சிறு முக்கோணங்களைச் சுற்று எல்லைகளாகக் கொண்ட ஷட்கோணம் (அறுகோணம்). இந்த சுற்றுக் கோணங்கள் பத்து சக்தி தேவியர்களின் இருப்பிடங்கள். இந்த ஆவரணத்தின் பெயர் "**ஸர்வார்த்த ஸாதகம்**". இதன் யோகினீ தேவதையின் பெயர் "**குலோத்தீர்ணயோகினீ**".

6. ஆறாவது ஆவரணம் :

இதுவும் பத்து சிறு முக்கோணங்களை எல்லைகளாகக் கொண்ட அறுகோணம். இந்த எல்லைக் கோணங்களின் பத்து சக்தி தேவியர்கள் குடிகொண்டிருக்கிறார்கள். இந்த ஆவரணத்தின் பெயர் "**ஸர்வரக்ஷாகர சக்ரம்**" என்பதாகும். "**நிர்ப்பய யோகனீ**" என்பவள் இதன் அதிஷ்டான யோகினீ தேவதையாவாள்.

7. ஏழாவது ஆவரணம் :

இது எட்டு சிறு முக்கோணங்களைச் சுற்றுகளாகக் கொண்ட ஒரு ஷட்கோணம். எட்டு முக்கோணங்களிலும் எட்டு சக்திதேவியர்கள் உறைந்திருக்கிறார்கள். இந்த ஆவரணத்தின் பெயர் "**ஸர்வ ரோகஹரம்**" என்பதாகும். இதன் யோகினீ தேவதையின் நாமதேயம் "**ரஹஸ்ய யோகினீ**" என்பதாகும்.

8. எட்டாவது ஆவரணம் :

இது ஒரே ஒரு முக்கோண வடிவமானது. இதிலேயே சக்தி தேவியர்களும், "**அதிரஹஸ்யயோகினீ**" என்ற யோகினீ தேவதையும் பீடங்களைக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆவரணத்தின் பெயர் "**ஸர்வஸித்தி ப்ரதம்**" என்பதாகும்.

9. ஒன்பதாவது ஆவரணம் :

மேலே கூறிய எட்டாவது ஆவரண வடிவமான முக்கோணத்தின் மையப்பகுதியில் புள்ளி வடிவில் இருப்பதே இந்த ஒன்பதாவது ஆவரணமாகும். இதுவேதான் பிந்து ஸ்தானம். இதிலேயே **வாமாதியர்கள்** என்ற சக்தி தேவியர்களும், அதிஷ்டான யோகினீதேவதையான

"பராபர ரஹஸ்ய யோகினீ"யும் இடம் கொண்டிருக்கிறார்கள். பிந்து ரூபமான இந்த ஆவரணத்தின் பெயர் "ஸர்வானந்த மயசக்ரம்" என்பதாகும். கர்ப்பக்ருஹம் (கருவறை) போன்ற இந்த கேந்திர பிந்துவில்தான் ஸாக்ஷாத் அன்னை பராசக்தி, சிவகாமேசுவரியாக, சிவனுடன் ஐக்கியம் கொண்டவளாக எழுந்தருளியிருக்கிறாள்.

ஆலயத்தின் ஒவ்வொரு சுற்றுப்பிராகாரமாக உள் நுழைந்து, வலம் வந்து அங்கங்கே இருக்கும் மூர்த்திகளையும் தரிசித்துக் கொண்டு, முடிவில் கர்ப்பக்ரஹம் சென்று மூலவரைச் சேவிப்பதுபோல், ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களும் இந்த கீர்த்தனைகளில் ஒவ்வொரு ஆவரணமாக வலம் வந்து அங்கங்கே இருக்கும் யோகினீ தேவியர்களையும், சக்தி தேவியர்களையும் சேவித்துக் கொண்டு முடிவில் ஒன்பதாவது ஆவரணத்தில் பிந்துஸ்தானத்தில் வீற்றிருக்கும் சிவகாமேசுவரியான கமலாம்பாளின் திவ்ய தர்சனத்தைக் கண்டு பரவசம் எய்துகிறார். நாமும் அதேவிதம், மேற்கூறிய விஷயங்களை கருத்திற்கொண்டு அந்த தெய்வீக அனுபவத்தைப் பெறுவோமாக!

* * *

"ஸ்ரீராஜராஜேஸ்வரீம்" - ஒரு குறிப்பு

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், "ஸ்ரீராஜராஜேஸ்வரீம்" என்று தொடங்கும் ஒரு க்ருதியையும் செய்திருக்கிறார். இந்த க்ருதி முழுவதும் மந்த்ரபூர்வமானது. இதை குரு-சிஷ்ய பரம்பரையாக உபதேசம் பெற்றுதான் கையாளவேண்டும். மேடைக் கச்சேரிகளில் இதனை கானம் செய்வது உசிதமில்லை. உபதேசம் பெற்றுக் கொண்டால், அவரவர்கள் இல்லத்தில் மானஸீகமாக ஜபம் செய்யலாம். மேலும் "விதேஹ முக்தி" என்பதே இதன் ப்ரார்த்தனையாக இருப்பதால், ஸம்ஸாரிகள் இதனை ஜபம், கானம் செய்வது உசிதமுமில்லை.

இவ்வித காரணங்களினால் இந்த க்ருதியை இந்த நூலில் அச்சிடவில்லை.

1. விநாயகர் துதி

"ஸ்ரீ மஹாகணபதிரவதுமாம்..."

நவாவரணக் கீர்த்தனைகளின் தொடக்கத்தில் இடர்களை அகற்றும் முழுமுதற்கடவுளான ஸ்ரீ விநாயகப் பெருமானின் த்யான மாக இந்த கீர்த்தனம் அமைந்துள்ளது. திருவாரூர் கோயிலின் எதிரில் உள்ள "கமலாலய"க் குளத்தின் கரையில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் இந்த கீர்த்தனையில் துதிக்கிறார். இந்த பிள்ளையார் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அருள்புரிந்து "மாற்றுரைத்த பிள்ளையார்" என்ற புகழ்ப் பெயர் பெற்றதாக தல வரலாறு கூறுகிறது.

"श्रीमहागणपतिरवतुमाम्"

।। गौळरागे तिश्रजाति त्रिपुटताळने गीयते ।।

पल्लवी

श्रीमहागणपतिरवतु मां सिद्धिविनायको मातङ्गमुखः ।। श्री ।।

अनुपल्लवी

कामजनक विधीन्द्रसन्नुत कमलालयतट-निवासो
कोमळतर पल्लवपदकर गुरुगुहाग्रजः शिवात्मजः ।। श्री ।।

चरणम्

सुवर्णाकर्षण विघ्नराजो पादाम्बुजो
गौरवर्णवसनधरो फालचन्द्रो
नारदादिविनुत लम्बोदरो
कुवलयस्वविषाण - पाशाङ्कुशमोदकप्रकाशकरो
भवजलधिनावो मूलप्रकृति स्वभावस्सुखतरो
रविसहस्रसन्निभदेहो कविजननुत मूषिकवाहो
अवनतदेवतासमूहो अविनाशकैवल्य देह: ।। श्री ।।

ஸ்ரீ மஹா கணபதிரவது மாம்

(கௌளராகத்தில் திஸ்ரஜாதி த்ரிபுட
தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீமஹாகணபதிரவதுமாம் ஸித்திவிநாயகோ மாதங்கமுக: ॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

காமஜநக விதீந்த்ரஸந்நுத கமலாலயதட-நிவாஸோ
கோமளதர பல்லவபதகர குருகுஹாக்ரஜ: ஶிவாத்மஜ: ॥ ஸ்ரீ ॥

சரணம்

ஸுவர்ணாகர்ஷண விக்நராஜோ பாதாம்புஜோ
கௌரவர்ண வஸநதரோ பாலசந்த்ரோ
நராதிவிநுத லம்போதரோ
குவலயஸ்வவிஷாண - பாஶாங்குஶமோதகப்ரகாஶகரோ
பவஜலதிநாவோ மூலப்ரக்ருதி ஸ்வபாவ ஸுகதரோ
ரவிஸஹஸ்ரஸந்நிபதேஹோ கவிஜநநுத மூஷிகவாஹோ
அவநததேவதாஸமூஹோ அவிநாஶகைவல்ய தேஹ: ॥ ஸ்ரீ ॥

சொல்லுக்கட்டு ஸ்வரம்

ப ம க ம - ரி க ம - தணகு ஜம்	நிஸரி கிடத . . புநி	ஸ ஜணுத நிஸரிம
தகணம் - மகம - தணதபப	ம-திமித-மபநிப	கிட தரி பநிஸ்ரி
குகுந்த ரி - மபநி - கிடத ஜ ம்	ரிக - தக ஜணு ததி	மி ஸ்ரிஸ் - குகுந்தரி
பநிபஸ் தி மி த ரி ரிகமரி	ஸஜம் - த ண த ஜம்	ததிங்கிணதோம்

(ஸ்ரீ மஹா)

பல்லவி

பதவுரை

ஸ்ரீ மஹாகணபதிரவது மாம் ஸித்திவினாயகோ மாதங்க முக:- யானைத் திருமுகம் கொண்ட சித்திவினாயக, மஹாகணபதி என்னைக் காத்தருள வேண்டும்.

அனுபல்லவியிலும், சரணத்திலும் வினாயகரின் திருநாமங்கள் அடைமொழிகளாக வருகின்றன. அவற்றின் பொருள் விளக்கம்:-

அனுபல்லவி

காமஜனக விதீந்த்ர நுத: - ஸ்ரீ மஹாவிஷ்ணு, ப்ரஹ்மதேவன், தேவேந்த்ரன் முதலானவர்களால் துதிக்கப் பட்டவர்.

கமலாலய தட நிவாஸ: - திருவாரூர் நகரின் "கமலாலயம்" என்ற திருக்குளத்தின் கரையில் எழுந்தருளி யிருப்பவர்.

கோமல தர பல்லவ பத கர: - இளந்தளிரைப் போன்ற, மிக மிருதுவான திருப்பாதங்களையும் திருக் கரங்களையும் கொண்டவர்.

குரு குஹாக்ரஜ: - "குருகுஹ"னாம் முருகப் பெருமானின் அண்ணன்.

ஶிவாத்மஜ: - பரமசிவனாரின் அன்பு மகன்

சரணம்

ஸுவர்ணாகர்ஷண: - சுந்தரமூர்த்தி நாயனாருக்காக (பொற் கொல்லனாக வந்து) தங்கத்தை உரைகல்லில்

உரைத்து, அது சுத்தமான பத்தரை மாற்று சொக்கத் தங்கம் என்று நிரூபணம் செய்தவர். இதனால்தான் இவருக்கு "மாற்றுரைத்தப் பிள்ளையார்" என்ற புகழ்ப்பெயர் பிரசித்தம்.

விக்னராஜ: - இடர்களின் மீது ஆட்சிமை கொண்டவர் (அதாவது இடர்களை ஏற்படுத்தவும் செய்வார், அவற்றை நீக்கவும் செய்வார்).

பாதாம்புஜ: - தாமரையைப் போன்ற திருவடிகளைக் கொண்டவர்.

கௌரவர்ணவஸன தர: - வெண்ணிற ஆடை உடுத்தியவர்.

பாலச்ந்த்ர: - நெற்றியின் மீது இளம்பிறைச் சந்திரனை அணியாகக் கொண்டவர்.

நாரதாதி விநுத: - நாரதர் முதலான தேவரிஷிகளால் வணங்கப் பட்டவர்.

லம்போதர: - தொங்கிய வயிற்றைக் கொண்டவர் ("தொந்தி"க் கணபதி).

குவலய-ஸ்வவிஷாண-பாச-அங்குச-மோதக-ப்ரகாச-கர:- குவளை மலர், தன்னுடைய (ஒடிந்த) தந்தம், பாசக்கயிறு, அங்குச ஆயுதம், கொழுக்கட்டை ஆகியவற்றை தனது ஐந்து கரங்களில் (துதிக்கை உள்பட) ஏந்திக் கொண்டு ஒளிர்பவர்.

பவஜலதி நாவ: - ஸம்ஸாரம் (பிறப்பு-இறப்பு) என்ற பெருங் கடலைக் கடக்க உதவும் படகைப் போன்றவர்.

மூலப்ரகருதிஸ்வபாவ: - ஆதிமுதற்காரணப் பொருளான மூலப்ர க்ருதியின் வடிவமேயானவர்.

ஸுகதர: - பேரானந்த வடிவமானவர்.

ரவிஸஹஸ்ர ஸந்நிப தேஹ: - ஆயிரமாயிரம் சூர்யன்களுக்கு ஒப்பான ஒளிர்மேனி படைத்தவர்.

கவிஜனநுத: -கவிஞர்களால் (அதாவது ஞானியர்களால்) துதிக்கப் பட்டவர்.

மூஷிக வாஹ: - மூஞ்சேறு வாகனத்தில் அமர்ந்தவர்

அவநத தேவதா ஸமூஹ: - தேவர்களின் குழாம்களால் வணங்கப்பட்டவர்.

அவிநாஶ கைவல்ய தேஹ: - அழிவேயில்லாத, என்றென்றும் நிலைத்திருக்கும் "கைவல்யம்" என்ற பேரானந்தப் பொருளின் வடிவேயானவர்.

பலஶ்ருதி: விநாயகப் பெருமானின் அருள் சித்திக்கும். எல்லா இடர்களும் நீங்கும். எல்லா நலன்களும் கிட்டும்.

★ ★ ★

2. முருகன் துதி

"பால)ஸுப்ரஹ்மண்யம் பஜே(அ)ஹம்"

ஸ்ரீ முருகப்பெருமானே திருத்தணியில் ப்ரத்யட்சமாக ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களை ஆட்கொண்டு அருள்புரிந்ததால், அவரையே தனது முதன்மையான குருவாக பாவித்து, அவரை தனது ஒவ்வொரு கீர்த்தனத்திலும் "குருகுஹன்" என்று போற்றியே தனது ஸாஹித்ய முத்திரையைப் பதிக்கிறார். இந்த நவாவரணக் கீர்த்தனைத் தொடரில், விநாயகப் பெருமானுக்கு அடுத்தபடியாக தனது இஷ்ட தெய்வமான முருகப்பெருமானை இந்த கீர்த்தனத்தில் துதிக்கிறார்.

"बालसुब्रह्मण्यं भजेऽहम्"

|| सुरटिरागे आदि ताळेन गीयते ||

पल्लवी

बालसुब्रह्मण्यं भजेऽहं भक्तकल्पभूरुहं श्री || बा ||

अनुपल्लवी

नीलकण्ठहृदानन्दकरं नित्यशुद्धबुद्धमुक्ताम्बरम् || बा ||

चरणम्

वेलायुधधरं सुन्दरं वेदान्तार्थबोधचतुरम्
फालाक्षगुरुगुहावतारं पराशक्तिसुकुमारंधीरम्
पालितगीर्वाणादि समूहं पंचभूतमयमायामोहम्
नीलकण्ठवाहं सुदेहं निरतिशयानन्दप्रवाहम् || बा ||

"பாலஸுப்ரஹ்மண்யம் பஜே(அ)ஹம்"

(ஸுரடி ராகத்தில் ஆதிதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

பாலஸுப்ரஹ்மண்யம் பஜே(அ)ஹம் பக்தகல்பபூருஹம் ஸ்ரீ || பா ||

அநுபல்லவி

நீலகண்டஹ்ருதாநந்தகரம் நித்யஶுத்தபுத்தமுக்தாம்பரம் || பா ||

சரணம்

வேலாயுததரம் ஸுந்தரம் வேதாந்தார்தபோதசதுரம்
பாலாக்ஷகுருகுஹாவதாரம் பராஶக்திஸுகுமாரம்தீரம்

மத்யமம்

பாலிதகீர்வாணாதி ஸமூஹம் பஞ்சபூதமயமாயாமோஹம்
நீலகண்டவாஹம் ஸுதேஹம் நிரதிஶயாநந்தப்ரவாஹம் || பா ||

பல்லவி

பதவுரை

பாலஸுப்ரஹ்மண்யம் பஜே(அ)ஹம் - நான் முருகப் பெருமானை பாலஸுப்ரஹ்மண்யனாக பஜனம் செய்கிறேன்.

பக்த கல்பபூருஹம் - அவர் பக்தஜனங்களுக்கு ஒரு கல்பவ்ருக்ஷத்தைப் போன்றவர். அதாவது, அடியார்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் அளிப்பவர்.

அனுபல்லவி

நீலகண்ட ஹ்ருதானந்த கரம் - திருநீலகண்டனாகத் திகழும் பரம சிவனாரின் மனதை ஆனந்தம் அடையச் செய்பவர்.

நித்ய-சுத்த-புத்த-முக்த-அம்பரம் — ப்ரஹ்மம் என்ற பரம் பொருள் வேதங்களில் இப்படியாக வர்ணிக்கப்படு கிறது. அதாவது, அது நித்யம்-நித்யமானது, அதாவது என்றென்றும் நிலைத்து நிற்பது. சுத்தம்-பரிசுத்த மானது (மாசுபடியாதது). புத்தம்-அறிவுமயமானது முக்தம்-விடுதலையானது (தளைகளற்றது). அம்பரம் - ஆகாச வெளியாக எங்கும், எப்பொழுதும் நீக்கமறப் பரவியது.

இவ்வாறெல்லாம் வேதங்களில் வர்ணிக்கப்பட்ட பரம்பொருள் ஸ்ரீ முருகப்பெருமானேயாவார்.

சரணம்

வேலாயுத தரம் - வேல் ஆயுதத்தை ஏந்தியவர்

ஸுந்தரம் - வடிவழகர்

வேதாந்தார்த்தபோத சதுரம் - வேதங்களின் கருப்பொருளான, ஓங்காரம் என்ற ப்ரணவ மஹாமந்த்ரத்தின் உட்பொருளை (தனது தந்தையான சிவபெருமானுக்கே) உபதேசிக்கக் கூடிய நிபுணத்துவம் பெற்றவர்.

பாலாக்ஷ குருகுஹாவதாரம் - பரமேசுவரனின் நெற்றிக்கண்ணி லிருந்து தோன்றி "குரு குஹ"னாக திருவவதாரம் செய்தவர்.

பராஶக்தி ஸுகுமாரம் - அன்னை பராசக்தியின் அழகிய திருக்குமாரன்.

தீரம் - (போர்க்களங்களில்) வீர, தீர பராக்ரமம் கொண்டவர்.

பாலித கீர்வாணாதி ஸமூஹம் - தேவர்கள் முதலான நல்லோர் களின் சமூகங்களை காப்பாற்றி அருளியவர்.

பஞ்சபூதமய மஹாமோஹம் - பஞ்சபூதங்கள் என்ற (அவற்றி னின்று தோன்றிய புலனுணர்வுகள், பஞ்ச கர்மேந்திரி யங்கள், பஞ்ச ஞானேந்த்ரியங்கள் முதலான பல தத்துவங்களின் தொகுப்பான) மாயையினால் ஜீவர் களை மயங்கச் செய்பவர்.

நீலகண்டவாஹம் - மயிலை வாகனமாகக் கொண்டவர்

ஸுதேஹம் - அழகிய திருமேனி படைத்தவர்

நிரதிஶயானந்த ப்ரவாஹம் - நிகரற்ற பேரானந்தம் என்ற பெரு வெள்ளத்தை ஊற்றுப்பெருக்கு எடுக்க வைப்பவர்.

பலஶ்ருதி - தீக்ஷிதரின் பல சீடர்கள் இந்த கீர்த்தனத்தை பாராயணம் செய்தே மனோபீஷ்டங்களைப் பெற்றதாகக் கூறப்படு கிறது. முக்கியமாக, ஸந்தான பாக்யம் இல்லாதவர்கள் இந்த துதியின் மூலமாக புத்ரஸந்தானம் பெறுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

★ ★ ★

3. த்யான கீர்த்தனம்

"கமலாம்பிகே ஆஶ்ரித கல்பலதிகே..."

ஸ்தோத்ர ரூபமாக இருக்கும் இலக்கியங்களில், அந்தந்த தேவதையின் துதி தொடங்கும் முன், அந்த தேவதையின் திவ்ய ரூபம், குணவிசேஷங்கள் ஆகியவற்றை சுருக்கமாக உள்ளடக்கி, "த்யான ச்லோகம்" என்று சிறப்புப் பாயிரம் எழுதப்படுவது இலக்கிய மரபு. அதன் பிரகாரம் இங்கே கமலாம்பிகையின் த்யான கீர்த்தனம் அமைக்கப்பட்டிருக்கிறது.

3. "कमलाम्बिके"

(नवावरणध्यानकीर्तनम्)

।। तोडिरागे रूपकताळेन गीयते ।।

पल्लवी

कमलाम्बिके आश्रितकल्पलतिके चण्डिके
जगदम्बिके कमनीयारूणांशुके करविधृतशुके मामव ।। क ।।

अनुपल्लवी

कमलासनादिपूजितकमलपदे बहुवरदे
कमलालय तीर्थ वैभवे शिवे करुणार्णवे ।। क ।।

चरणम्

सकललोकनायिके संगीत - रसिके
सुकवित्व प्रदायिके सुन्दरि गतमायिके
विकळेबरमुक्तिदाननिपुणे अघहरणे
वियदादिभूतकिरणे विनोदचरणे अरुणे

सकळे गुरुगुह करणे सदाशिवान्त: करणे
अकचटतपादिवर्णे अखण्डैकरसपूर्णे ।। क ।।

"கமலாம்பிகே ஆஶ்ரித கல்பலதிகே"

(நவாவரண த்யாந கீர்தநம்)

(தோடி ராகத்தில் ரூபகதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

கமலாம்பிகே அம்ப ஆஶ்ரிதகல்பலதிகே சண்டிகே
ஜகதம்பிகே கமநீயாருணாம்ஶுகே கரவித்ருதஶுகே மாமவ ॥ கம ॥

அநுபல்லவி

கமலாஸநாதிபூஜிதகமலபதே பஹுவரதே
கமலாலய தீர்த்த வைபவே ஶிவே கருணார்ணவே ॥ கம ॥

சரணம்

ஸகலலோகநாயிகே ஸங்கீத - ரஸிகே
ஸுகவித்வ ப்ரதாயிகே ஸுந்தரி கதமாயிகே
விகளேபரமுக்திதாநநிபுணே அகஹரணே
வியதாதிபூதகிரணே விநோதசரணே அருணே

மத்யமம்

ஸகளே குருகுஹ கரணே ஸதாஶிவாந்த: கரணே
அகசடதபாதிவர்ணே அகண்டைகரஸபூர்ணே ॥ கம ॥

பதவுரை

பல்லவி

கமலாம்பிகே	-	*அன்னை கமலாம்பிகையே!*
ஆச்ரித கல்பலதிகே	-	*தன்னை அண்டிய அடியார்களுக்கு, வாரி வழங்கும், கற்பகக் கொடியே!*
சண்டிகே -	-	*சண்டன் என்ற அசுரனை மாய்த்தவளே!*
ஜகதம்பிகே -	-	*அகிலங்கள் அனைத்திற்கும் தாயே!*

கமனீய அருணாம்பரா‍ஶுகே - அழகான சிவப்பு ஆடையை உடுத்தவளே!

கரவித்ருதஶுகே - கையில் கிளியை ஏந்தியவளே!

மாம் அவ - என்னைக் காப்பாற்றுவாயாக!

அனுபல்லவி

கமலாஸனாதி பூஜிதகமலபதே - ப்ரஹ்மாதி தேவர்களால் வணங்கப் பட்ட பாதகமலங்களையுடையவளே!

பஹுவரதே - ஏராளமாக வரங்களை அள்ளிக் கொடுப்பவளே!

கமலாலய தீர்த்த வைபவே - கமலாலயம் என்ற புனித தீர்த்தத்திற்கு மகிமைகளைக் கூட்டியவளே!

ஶிவே - சிவனாரின் மனைவியே! (மங்கள ஸ்வரூபியே!)

கருணார்ணவே - கருணைப் பெருங்கடலே!

(மாம் அவ) - (என்னைக் காப்பாற்றுவாயாக!)

சரணம்

விளிவேற்றுமையில் வரும் விசேடண பதங்களின் கருத்துரைகள் அந்த வேற்றுமையிலேயே கொடுக்கப்படுகின்றன.

ஸகலலோகநாயிகே - அனைத்து புவனங்களுக்கும் அரசியே!

ஸங்கீத ரஸிகே - ஸங்கீத சாஸ்த்ரத்தில் ஆர்வம் கொண்டவளே!

ஸுகவித்வ ப்ரதாயிகே - சிறப்பான கவித்திறனை நல்குபவளே!

ஸுந்தரி - வடிவழகியே!

கதமாயிகே - மாயைகளைக் கடந்தவளே!

விகலேவரமுக்திதான நிபுணே - "விதேஹமுக்தி" என்ற வீட்டுப் பேற்றை அளிக்கும் வல்லமை படைத்த

	வளே! (அதாவது, அம்பாளின் பக்தர்கள் பூத உடலை நீத்தபின், மறுபடியும் பிறவாத மோக்ஷத்தை அடைகிறார்கள் என்பது கருத்து)
அகஹரணே	- பாபங்களைப் போக்குபவளே!
வியதாதி பூத கிரணே	- ஆகாயம் முதலான பஞ்ச மஹா பூதங்களை தனது அம்சமாகக் கொண்டவளே!
விநோத சரணே	- இன்பமளிக்கும் திருவடிகளைக் கொண்டவளே
அருணே	- இளஞ்சிவப்பு நிறத்தவளே!
ஸகலே	- பரிபூரணமானவளே! (அறுபத்தி நான்கு கலைகளின் வடிவமானவளே!)
குருகுஹ கரணே	- குருகுஹனின் அன்னையே!
ஸதாஶிவாந்த கரணே	- ஸதாசிவனின் உள்ளத்தில் உறைந்திருப்பவளே!
அகசடதபாதிவர்ணே	- அ ("அ"வில் தொடங்கும் உயிர் எழுத்துக்கள்) "க ச ட த ப" என்று தொடங்கும் மெய்யெழுத்துக்கள் ஆகிய அனைத்து அக்ஷரங்களின் வடிவமானவளே!
அகண்டைக ரஸபூர்ணே	- அகண்டாகாரமான பேரானந்தம் நிறைந்தவளே!
(மாம் அவ)	- (என்னைக் காப்பாற்றவேண்டும்)
பலஶ்ருதி, மகத்துவம்	- அம்பிகையின் ரக்ஷை எப்பொழுதும் துணையிருக்கும். விருப்பங்கள் யாவும் நிறைவேறும். ஸங்கீதம் போன்ற நுண் கலைகளில் தேர்ச்சி கிட்டும். கவிதா சக்தி கிடைக்கப் பெறும். சொல்லாட்சி, மொழித்திறன் ஆகியவை கைகூடும்.

★ ★ ★

முதலாவது ஆவரணம்

त्रैलोक्य मोहन चक्रम्

"த்ரைலோக்ய மோகன சக்ரம்"



(பூபுரச்சதுரம் - சதுர வடிவமான,
மூன்று இணைகோடு சுற்று)

4. முதலாவது ஆவரண கீர்த்தனம்

"கமலாம்பா ஸம்ரக்ஷது மாம்....

"कमलाम्बा संरक्षतु माम्"

(प्रथमावरणकीर्तनम्)

।। आनन्दभैरविरागे तिश्रजाति त्रिपुट–ताळेन गीयते ।।

पल्लवी

कमलाम्बा संरक्षतुमां हृत्कमलानगरनिवासिनि ।। क ।।

अनुपल्लवी

सुमनसाराधिताब्जमुखी सुन्दरमन:प्रियकरसखी
कमलजानन्दबोधसुखी कान्ततारपञ्जरशुकी ।। क ।।

चरणम्

त्रिपुरादिचक्रेश्वरी अणिमादिसिद्धीश्वरी
नित्याकामेश्वरी क्षितिपुरत्रैलोक्य मोहन–चक्रवर्तिनी
प्रकटयोगिनी सुररिपुमहिषासुरादिमर्दिनी
निगमपुराणादिसंवेदिनी
त्रिपुरेशी गुरुगुहजननी त्रिपुरभंजनरंजनी
मधुरिपुसहोदरी तलोदरी त्रिपुरसुन्दरी महेश्वरी ।। क ।।

"கமலாம்பா ஸம்ரக்ஷது மாம்"

முதலாவது ஆவரணத்தின் கீர்த்தனம்

(ஆனந்தபைரவி ராகத்தில் த்ரிபுட தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

கமலாம்பா ஸம்ரக்ஷதுமாம் ஹ்ருத்கமலாநகரநிவாஸிநீ ॥ கம ॥

அநுபல்லவி

ஸுமநஸாராதிதாப்ஜமுகீ ஸுந்தரமந:ப்ரியகரஸகீ
கமலஜாநந்தபோதஸுகீ காந்ததாரபஞ்ஜரஶுகீ ॥ கம ॥

சரணம்

த்ரிபுராதிசக்ரேஶ்வரீ அணிமாதிஸித்தீஶ்வரீ
நித்யாகாமேஶ்வரீ க்ஷிதிபுரத்ரைலோக்ய மோஹந-சக்ரவர்திநீ
ப்ரகடயோகிநீ ஸுரரிபுமஹிஷாஸுராதிமர்தினீ
நிகமபுராணாதிஸம்வேதிநீ

மத்யமம்

த்ரிபுரேஶீ குருகுஹஜநநீ த்ரிபுரபஞ்ஜநரஞ்ஜநீ
மதுரிபுஸஹோதரீ தலோதரீ த்ரிபுரஸுந்தரீ மஹேஶ்வரீ ॥ கம ॥

கமலாம்பா ஸம்ரக்ஷது மாம்....

இந்த முதலாவது ஆவரணத்தின் சக்ரம் "த்ரைலோக்ய மோஹன சக்ரம்" எனப்படும். இதன் யோகினீ தேவதை "ப்ரகட-யோகினீ" எனப்படுவாள். இதில் குடிகொண்டிருக்கும் சக்தி தேவதைகள் வெகு ஏராளம். அவர்களில் பல வகைகள், இனங்கள் உண்டு. அந்த தேவியர்களின் பட்டியல் கீழே:-

முத்ரா தேவியர்கள் எனப்பட்டவர்கள் - ஹ்ருதய தேவீ, சிரோ தேவீ, சிகா தேவீ, கவச தேவீ, நேத்ர தேவீ, அஸ்த்ர தேவீ (இவர்கள் ஷடங்கதேவியர்கள் என்றும் ந்யாஸ தேவியர்கள் என்றும் அறியப்படுவர்)

நித்யா தேவியர்கள் எனப்பட்டவர்கள் - காமேச்வரீ, பகமாலினீ, நித்யக்லின்னா, பேருண்டா, வஹ்னி வாஸினீ, மஹா

வஜ்ரேச்வரீ, சிவதூதீ, த்வரிதா, குலஸுந்தரீ, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலினீ, சித்ரா, மஹாநித்யா (இவர்கள் திதி நித்யா தேவியர்கள் என்றும் அறியப்படுவார்கள். இவர்கள் மொத்தம் பதினாறுபேர்கள்)

மித்ரேஶமயீ முதலான "மயீ" தேவியர்கள்- மித்ரேசமயீ, ஓட்டீசமயீ, ஷஷ்டீசமயீ, சர்யா நாத மயீ, லோபா முத்ரா மயீ, அகஸ்த்ய மயீ, காலதாபன மயீ, தர்மாசார்ய மயீ, முக்த கேசீச்வர மயீ, தீப கலாநாதமயீ, விஷ்ணுதேவ மயீ, ப்ரபாகரதேவமயீ, தேஜோதேவமயீ மனோதேவமயீ, கல்யாண தேவமயீ, ரத்னதேவமயீ, வாஸுதேவமயீ, ஸ்ரீ ராமானந்தமயீ

அணிமாதி மஹாஸித்தி தேவியர்கள் - அணிமாஸித்தி, லகிமாஸித்தி, மஹிமாஸித்தி, ஈசித்வஸித்தி, வசித்வ ஸித்தி, கரிமா ஸித்தி, ப்ராகாம்யஸித்தி, புக்திஸித்தி, இச்சாஸித்தி, ப்ராப்திஸித்தி, ஸர்வகாமஸித்தி

ஸப்தமாத்ருகாதி தேவியர்கள் - ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்த்ரீ, சாமுண்டீ, மஹாலக்ஷ்மீ

ஸர்வ ஸம்க்ஷோபணாதி தேவியர்கள் - ஸர்வஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ, ஸர்வவசங்கரீ, ஸர்வோன்மாதினீ, ஸர்வமஹாங்குசீ, ஸர்வகேசரீ, ஸர்வபீஜா, ஸர்வயோனீ, ஸர்வத்ரிகண்டா

குறிப்பு : இந்த தேவியர்களின் பெயர்கள் அவரவர்களுடைய சக்தி, வைபவங்கள் முதலானவற்றைக் குறிப்பிடுகின்றன. அந்தப் பெயர்களின் உச்சாரணமே தெய்வீக அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

பதவுரை

பல்லவி

கமலாம்பா ஸம்ரக்ஷது மாம் - அன்னை கமலாம்பிகை என்னை நன்கு பராமரிக்க வேண்டும்.

ஹ்ருத்கமலாநகர நிவாஸினீ - அவள் "கமலாநகரம்" என்று அழைக்கப்படும் திருவாரூரில் மாத்திரம் வசிப்பவள் அல்ல. என் "இதயக் கமலத்"திலும் உறைந்திருப்பவள். "கமலா நகரம்" என்பது மந்த்ர சாஸ்த்ரத்தில் வரும் "ஸ்ரீபுரம்" என்பதனையும் ஸ்ரீசக்ரத்தையும் குறிக்கும்.

குறிப்பு : இந்த கீர்த்தனம் முதலாவது ஆவரணத்தைக் குறிப்பிடுகிறது என்பதை ஸங்கேதமாக, உணர்த்தும் பொருட்டு இதில் வரும் பெயர்ச் சொல், விசேடண பதங்கள் யாவும் ஸம்ஸ்க்ருத மொழியின் முதலாம் வேற்றுமையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

அநுபல்லவி

ஸுமனஸாராதிதாப்ஜமுகீ - அம்பிகையை நல்ல மனம் படைத்தோர்களும், தேவர்களும் ஆராதிக்கிறார்கள். அவளுடைய திருமுகம் தாமரை போன்று அழகாக இருக்கிறது.

ஸுந்தரமன - ப்ரியகரஸகீ - ஸுந்தரேசனின் உள்ளத்தை மகிழ்விக்கும் ஆருயிர்த்துணைவி

கமலஜானந்தபோதமுகீ - அவளுடைய திருமுகம் மஹாலக்ஷ்மிக்கு ஆனந்தத்தையும் ஞானபோதத்தையும் அளிக்கிறது.

காந்த தார பஞ்ஜர ஶுகீ - (ப்ரணவம் என்ற) ஓங்காரம் என்ற அழகான கூண்டில் வாஸம் செய்யும் பேடைக் கிளி.

சரணம்

த்ரிபுராதி சக்ரேச்வரீ - "த்ரிபுரம்" என்ற சக்ரத்தில் தொடங்கி "ஸர்வானந்தமயம்" என்ற சக்ரம் வரையிலான ஒன்பது சக்ரங்களில் அரசாட்சி புரிபவள்.

அணிமாதி ஸித்தீச்வரீ - அணிமாதி மஹா ஸித்திகளின் சக்தி தேவியர்களாக இருப்பவள் (அவர்களின் பெயர்கள் கீர்த்தனத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

நித்யா காமேச்வரீ - நித்யா, காமேச்வரீ முதலான நித்யா தேவியர் களின் ஸ்வரூபமாக இருக்கப்பட்டவள் (அவர்களின் பெயர்ப்பட்டியல் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

க்ஷிதிபுரத்ரைலோக்ய மோஹன சக்ரவர்தினீ - "பூபுரம்" என்று அழைக்கப்பட்ட மூன்று புவனங்களையும் ஆகர்ஷிக்

கும் சக்தி படைத்து "த்ரைலோக்ய மோஹனம்" என்ற சக்ரத்திற்கு அதிஷ்டான தேவியாக, சக்ரவர்த்தினியாக, அரசாட்சி புரிபவள்.

ப்ரகடயோகினீ - இந்த சக்ரத்தின் யோகினீ தேவதையான ப்ரகட யோகினியின் ஸ்வரூபமாக உள்ளவள்.

ஸுரரிபு மஹிஷாஸுராதிமர்தினீ -தேவர்களின் சத்ருக்களான மஹிஷாசுரன் முதலான அரக்கர்களைக் கொன்றவள்.

நிகம புராணாதி ஸம்வேதினீ - வேதங்கள், புராணங்கள் முதலான வற்றால் விளங்கப்பெறப்பட்டவள்.

த்ரிபுரேஶீ - "த்ரிபுரம்" என்ற தெய்வத்திருநகரின் அரசியாக விளங்குபவள். (அல்லது மனஸ், சித்தம், புத்தி என்ற அந்தக் கரணத்தின் மூன்று அம்சங்களை பிரேரிப்பவள்)

குருகுஹ ஜனனீ - குருகுஹனாக விளங்கும் முருகப்பெருமானின் அன்னை.

த்ரிபுரபஞ்ஜனரஞ்ஜனீ - முப்புரங்களை அழித்த பரமசிவனாருக்கு இனியவள்.

மதுரிபுஸஹோதரீ - மது என்ற அசுரனைக் கொன்ற மஹா விஷ்ணுவின் ஸஹோதரி.

தலோதரீ - சிற்றிடையைக் கொண்டவள்

த்ரிபுரஸுந்தரீ - மூன்று புவனங்களிலும் இணையில்லாத பேரழகி.

மஹேஶ்வரீ - அரசிகளில் மிகச்சிறந்தவள் - பேரரசி

மேலே கூறிய அனைத்து குணவிசேஷங்களும் கொண்ட கமலாம்பிகை என்னை நன்கு ரக்ஷிக்கட்டும்!

இந்த கீர்த்தனையின் பலஶ்ருதி, ப்ரபாவம் – அம்பிகையின் அருள் ஒரு ரக்ஷையாக இருக்கும். அணிமாதி மஹா சித்திகள் கைவரப்படும். உலகத்தார் அனைவரையும் வசீகரிக்கும் தன்மைகள் கைகூடும். ஸகல ஐசுவரியங்களும் கிடைக்கப்பெறும்.

★ ★ ★

இரண்டாவது ஆவரணம்

सर्वाशापरिपूरक चक्रम्

“ஸர்வாஶா பரிபூரக சக்ரம்”



(மூன்று சுற்று மேகலையின் உள்ளே
ஷோடசதளபத்மம் - பதினாறு
இதழ்களைக்கொண்ட வட்டச்சுற்று)

5. இரண்டாவது ஆவரண கீர்த்தனம்

"கமலாம்பாம் பஜரே"

"**कमलाम्बां भजरे**"

(द्वितीयावरण कीर्तनम्)

।। कल्याणिरागे आदिताळेन गीयते ।।

पल्लवी

कमलांबां भज रे रे मानस कल्पित मायाकार्यं त्यज रे ।। क ।।

अनुपल्लवी

कमलावाणीसेवितपार्श्वां कम्बुजयग्रीवां नतदेवाम्
कमलापुरसदनां मृदुगदनां कमनीयरदनां कमलवदनाम् ।। क ।।

चरणम्

सर्वाशापरिपूरकचक्रस्वामिनीं परमशिवकामिनीम्
दुर्वासार्चितगुप्तयोगिनीं दुःखध्वंसिनीं हंसिनीम्
निर्वाणनिजसुखप्रदायिनीं नित्यकल्याणीं कात्यापनीम्
शर्वाणीं मधुपविजयवेणीं सद्गुरुगुहजननीं निरंजनीम्
गर्वितभण्डासुरभञ्जनीं कामाकर्षिण्यादिरञ्जनीम्
निर्विशेषचैतन्यरूपिणीम् उर्वीतत्वादि स्वरूपिणीम् ।। क ।।

"கமலாம்பாம் பஜரே"

இரண்டாவது ஆவரண கீர்த்தனம்

(கல்யாணிராகத்தில் ஆதிதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

கமலாம்பாம் பஜரே ரே மாநஸ கல்பித மாயாகார்யம் த்யஜ ரே ॥ கம ॥

அநுபல்லவி

கமலாவாணீஸேவிதபார்ஸ்வாம் கம்புஜயக்ரீவாம் நததேவாம்

மத்யமம்

கமலாபுரஸதநாம் ம்ருதுகதநாம் கமநீயரதநாம் கமலவதநாம் ॥ கம ॥

சரணம்

ஸர்வாஶாபரிபூரகசக்ரஸ்வாமிநீம் பரமஶிவகாமிநீம்
துர்வாஸார்சிதகுப்தயோகிநீம் து:கத்வம்ஸிநீம் ஹம்ஸிநீம்
நிர்வாணநிஜஸுகப்ரதாயிநீம் நித்யகல்யாணீம் காத்யாயநீம்
ஶர்வாணீம் மதுபவிஜயவேணீம் ஸத்குருகுஹஜநநீம் நிரஞ்ஜநீம்

மத்யமம்

கர்விதபண்டாஸுரபஞ்ஜநீம் காமாகர்ஷிண்யாதிரஞ்ஜநீம்
நிர்விஶேஷசைதந்யரூபிணீம் உர்வீதத்வாதி ஸ்வரூபிணீம் ॥ கம ॥

"கமலாம்பாம் பஜரே"

இந்த இரண்டாவது ஆவரணத்தில் வருவது "ஸர்வாசா பரிபூரக சக்ரம்" அதாவது எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கும் சக்ரம் என்று பொருள். இதில் ஆட்சி செலுத்துவது "குப்த யோகினீ" என்ற யோகினீ தேவதையாகும். இதில் குடிகொண்டிருக்கும் சக்தி தேவதைகளின் பெயர்கள் காமாகர்ஷிணீ, புத்த்யாகர்ஷிணீ, அஹங் காராகர்ஷிணி, சப்தாகர்ஷிணீ, ஸ்பர்சாகர் ஷிணீ, ரூபாகர்ஷிணீ,

ரஸாகர்ஷிணீ, கந்தாகர்ஷிணீ, சித்தாகர்ஷிணீ, தைர்யாகர்ஷிணீ, ஸ்ம்ருத்யாகர்ஷிணீ, நாமாகர் ஷிணீ, பீஜாகர்ஷிணீ, ஆத்மாகர்ஷிணீ, அம்ருதாகர்ஷிணீ, சரீராகர் ஷிணீ என்பனவாகும். (பெயர்களுக்கு ஏற்ப, இந்த தேவதைகள் காமம், புத்தி, அஹங்காரம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், சித்தம், தைர்யம், ஸ்ம்ருதி, நாமம், பீஜம், ஆத்மா, அம்ருதம், சரீரம் ஆகிய தத்துவங்களின் ஆகர்ஷண சக்திகள் படைத்தவர்கள்.)

பதவுரை

பல்லவி

''கமலாம்பாம் பஜ ரே, மானஸ, கல்பிதமாயாகார்யம் த்யஜ ரே''
- ''ஓ மனமே! மாயையின் (காரணமாகத் தோன்றும் ஆசா, பாசங்கள் போன்ற) விளைவுகளைத் துறப்பாயாக! கமலாம்பிகையை பஜனம் செய்வாயாக!'' (குறிப்பு இந்த கீர்த்தனம் இரண்டாவது ஆவரணத்திற்கானது என்பதனை ஸூசகமாக குறிப்பிடும் வகையில் ''கமலாம் பாம்'' என்ற பெயர்ச்சொல் இரண்டாவது வேற்றுமையில் தொடங்கு கிறது என்பது தீக்ஷிதரின் கவிதா சாதுர்யம்.)

இதனைத் தொடர்ந்து, அனுபல்லவி, சரணம் ஆகிய வற்றில் வரும் நாமாவளிகள் அனைத்தும் இரண்டாம் வேற்றுமையிலேயே அமையப் பெற்றிருக்கின்றன.)

அனுபல்லவி, சரணம்

இவற்றில் வரும் **நாமாவளிகள்** அம்பிகையின் குணாதி சயங்களை வர்ணிக்கும் அடை மொழிகளாகும். அவற்றின், ஒவ் வொன்றின், பொருளுரைகள் கீழே கொடுக்கப்படுகின்றன.

கமலா, வாணீ **ஸேவித பார்ச்வாம்** - மஹாலக்ஷ்மி, ஸரஸ்வதி தேவி இருவரும் இருமருங்கிலும் ஸேவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கம்பு ஜய க்ரீவாம் - தேவியின் கழுத்து வெண்சங்கின் அழகை மிஞ்சுவதாக இருக்கிறது.

நத தேவீம் - தேவர்கள் அனைவரும் தேவியை வணங்கி யிருக்கிறார்கள்.

கமலாபுர ஸதனாம் - கமலாபுரம் என்ற திருவாரூரில் எழுந்தருளு கிறாள்.

ம்ருது கதனாம் - மென்மையான, இனிமையான பேச்சைக் கொண்டவள்.

கமனீய ரதனாம் - கவர்ச்சியான பற்களைக் கொண்டவள்.

கமலவதனாம் - தாமரை போன்ற திருமுகம் படைத்தவள்.

ஸர்வாசா பரிபூரகசக்ர ஸ்வாமினீம் - எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கவல்ல சக்கரத்தின் அதிஷ்டா னக் கடவுளாக இருப்பவள்

பரமசிவ காமினீம் - பரமேசுவரனின் காதல் மனைவி

துர்வாஸார்சித குப்த யோகினீம் - துர்வாஸ மஹரிஷியால் ஆராதிக்கப்பட்ட "குப்தயோகினீ" வடிவானவள்

து:கத்வம்ஸினீம் - எல்லா துயர்களையும் அழிப்பவள்.

ஹம்ஸினீம் - பரமஹம்ஸர்கள் என்ற யோகியர்களின் "ப்ரஹ்ம வித்யா" ஸ்வரூபிணீ

நிர்வாண நிஜஸுக ப்ரதாயினீம் - கைவல்யம் என்ற ஆத்மானந்த சுகத்தை அருள்பவள்.

நித்ய கல்யாணீம் - என்றென்றும் மங்கள ஸ்வரூபியாக இருப்பவள்.

காத்யாயனீம் - "காத்யாயனீ" என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட வள்.

பார்வாணீம் - பரமசிவனாரின் அன்புத் துணைவி

மதுப விஜய வேணீம் - கருவண்டின் கருமை நிறத்தை விஞ்சும் கூந்தலழகு கொண்டவள்.

ஸத்குரு குஹஜனனீம் - *ஸத்குருவாகத் திகழும் குஹப் பெருமானின் அன்னை.*

நிரஞ்ஜனீம் - (அவித்யை என்ற) மாசு படியாதவள்

கர்வித பண்டாஸுர பஞ்ஜனீம் - இறுமாப்புடன் போரிட வந்த பண்டாஸுரனை மாய்த்தவள்.

காமாகர்ஷிண்யாதி ரஞ்ஜனீம் - காமாகர்ஷிணீ முதலான சக்தி தேவதைகளை மகிழ்விப்பவள் (இவர்களின் அட்டவணை கீர்த்தனத்தின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

நிர்விஶேஷ சைதன்ய ரூபிணீம் - நிர்விகல்பஜ்ஞானம் என்ற ஸச்சிதானந்தப் பொருளாய் இருப்பவள்.

உர்வீதத்த்வாதி ஸ்வரூபிணீம் - ப்ருதிவீ முதலான பஞ்ச மஹா பூதங்களின் தத்துவ ஸ்வரூபமாக விளங்குபவள்.

கீர்த்தனத்தின் விசேஷ பலன்கள் (பலஶ்ருதி)

மனதினால் நினைத்த அனைத்து விருப்பங்களும் நிறை வேறும். அனைத்து மங்களங்களும், நலன்களும் கிட்டும். மக்கள் அனைத்து இடர்களும், துக்கங்களும் நீங்கி சுகம் பெறுவர். பேரானந்தப் பெருவாழ்வும் சித்திக்கப் பெறுவர். உபாஸகனுக்கு பல ஆகர்ஷண சக்திகள் (வசிய சக்திகள்) சித்திக்கப் பெறும்.

★ ★ ★

மூன்றாவது ஆவரணம்

सर्वसंक्षोभण चक्रम्

"ஸர்வ ஸம்க்ஷோபண சக்ரம்"



(அஷ்டதளபத்மம் - எட்டு இதழ்களைக்
கொண்ட வட்டச்சுற்று)

6. மூன்றாவது ஆவரண கீர்த்தனம்

"ஸ்ரீ கமலாம்பிகயா..."

"श्रीकमलाम्बिकया"

(तृतीयावरणकीर्तनम्)

।। शङ्कराभरणरागे रूपकताळेन गीयते ।।

पल्लवी

श्रीकमलाम्बिकया कटाक्षितोऽहम्
सच्चिदानन्द परिपूर्ण ब्रह्मास्मि ।। श्री ।।

अनुपल्लवी

पाकशासनादि सकलदेवता सेवितया
पङ्कजासनादि पञ्चकृत्या कृत्भावितया
शोकहरचतुरपदया मूक मुख्यवाक्प्रदया
कोकनदविजयपदया गुरुगुह तत्त्रैपदया ।। श्री ।।

चरणम्

अनङ्गकुसुमाद्यष्टशक्त्याकारया
अरुणवर्ण संक्षोभण चक्राकारया
अनन्तकोट्यण्डनायक शङ्करनायिकया
अष्टवर्गात्मक गुप्ततरया वरया
अनङ्गाद्युपासितया अष्टदळाब्जस्थितया
धनुर्बाणधरकरया दयासुधासागरया ।। श्री ।।

"ஸ்ரீ கமலாம்பிகயா..."

(மூன்றாவது ஆவரண கீர்த்தனம்)

(சங்கராபரண ராகத்தில் ரூபக தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீகமலாம்பிகயா கடாக்ஷிதோஹம் அம்ப
ஸச்சிதாநந்த பரிபூர்ண ப்ரஹ்மாஸ்மி॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

பாகஶாஸநாதி ஸகலதேவதா ஸேவிதயா
பங்கஜாஸநாதி பஞ்சக்ருத்யா க்ருத்பாவிதயா

மத்யமம்

ஶோகஹரசதுரபதயா மூக முக்யவாக்ப்ரதயா
கோகநதவிஜயபதயா குருகுஹ தத்த்ரைபதயா ॥ ஸ்ரீ ॥

சரணம்

அநங்ககுஸுமாத்யஷ்டஶக்த்யாகாரயா
அருணவர்ண ஸம்க்ஷோபண சக்ராகாரயா
அநந்தகோட்யண்டநாயக ஶங்கரநாயிகயா
அஷ்டவர்காத்மக குப்ததரயா வரயா

மத்யமம்

அநங்காத்யுபாஸிதயா அஷ்டதளாப்ஜஸ்திதயா
தநுர்பாணதரகரயா தயாஸுதாஸாகரயா ॥ ஸ்ரீ ॥

ஸ்ரீ கமலாம்பிகயா...

இந்த மூன்றாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வ ஸம்க்ஷோபண சக்ரம்" என்பதாகும். இதன் யோகினீ தேவதை "குப்த தர

யோகினி'' யாவாள். இதில் குடிகொண்டிருக்கும் சக்தி தேவதைகள் எண்மர்-அவர்களின் பெயர்கள் அனங்க குஸுமா, அனங்கமேகலா, அனங்கமதனா, அனங்க மதனாதுரா, அனங்க ரேகா, அனங்க வேகினீ, அனங்காங்குசா, அனங்க மாலினி என்பதாகும்.

இந்த மூன்றாவது கீர்த்தனத்தில் விபக்தி ப்ரயோகம் (வேற்றுமை உருபு) மூன்றாவது வேற்றுமையாகும். இது ''காவ்ய ஸங்கேதம்''.

பதவுரை

பல்லவி

ஸ்ரீ கமலாம்பிகயா கடாக்ஷிதோ (அ)ஹம் - நான் அன்னை கமலாம்பாவினால் கடாக்ஷிக்கப் பெற்றேன் (கடைக்கண் நோக்கு பெற்றேன்). அதன் காரணமாக,

ஸச்சிதானந்த பரிபூர்ண ப்ரஹ்மாஸ்மி - நான் பரிபூரணமான ப்ரஹ்மமாகவே ஆகிவிட்டேன். எனது ஸ்வரூபம் ஸத்+சித்+ஆனந்தமாகும் (ஸச்சிதானந்தம்) அதாவது, நான் என்றென்றும் (அழிவில்லாமல்) நிலைத்திருப் பேன் (ஸத்); ஞானமயமாக இருப்பேன் (சித்); ஆனந்தமயமாகவும் இருப்பேன் (ஆனந்தம்).

அனுபல்லவி

தேவியின் விசேடண பதங்கள் மூன்றாம் வேற்றுமையில் இருந் தாலும், வாசககர்கள் வசதியை முன்னிட்டு, முதலாம் வேற்றுமையில் (எழுவாய் நிலையில்) பொருள்கள் கொடுக்கப்படுகின்றன. இதே பிரகாரம் மற்ற கீர்த்தனைகளைகளுக்கும் அனுசரிக்கப்படுகிறது.

பாகசாஸனாதிஸகலதேவதா ஸேவிதயா - இந்த்ராதி ஸமஸ்த தேவர்களால் சேவிக்கப்பட்டவள்.

பங்கஜாஸநாதி பஞ்சக்ருத்யா க்ருத்பாவிதயா - தேவியே ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஈச்வரன், ஸதாசிவன் என்ற ஐந்து வடிவங்களை ஏற்று, முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களை வகுத்துக் கொண்டு

செய்கிறாள். (ஒப்பு நோக்க - லலிதா ஸஹஸ்ரநாமம் - "ஸ்ருஷ்டி கர்த்ரீ ப்ரஹ்மரூபா, கோப்த்ரீ கோவிந்த ரூபிணீ । ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீ (ஈ) ச்வரீ । ஸதாசிவானுக்ரகதா பஞ்சக்ருத்ய பராயணா ॥ "

சோகஹர சதுரபதயா - அவளுடைய திருவடிகள் அடியார்களின் துயரங்களை அகற்றுவதில் வல்லமை கொண்டவைகள்.

மூக முக்யவாக்ப்ரதயா - ஊமைக்கும் அருள்புரிந்து அவனுக்கு நாவன்மை அளிப்பவள். (மூககவியின் வரலாறு இங்கு குறிப்பிடப்படுகிறது.

கோகநதவிஜய பதயா - அவளுடைய திருப்பாதங்கள் செந்தாமரையை வென்றவைகள்.

குருகுஹ தத்த்ரைபதயா - குருகுஹனின் மூன்று சொல் உபதேசமான ("அஹம் ப்ரஹ்ம அஸ்மி") (அல்லது "தத் த்வம் அஸி") என்ற தத்துவத்தின் ஸ்வரூபமாக இருப்பவள்.

சரணம்

அனங்க குஸுமாத்யஷ்ட ஶக்த்யாகாரயா - அனங்ககுஸுமா முதலான எட்டு சக்தி தேவதைகளின் உருவத்தில் இருப்பவள் (இவர்களின் பெயர்ப்பட்டியல் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

அருணவர்ண ஸம்க்ஷோபணசக்ராகாரயா - சிவப்பு நிறத்தில் இருக்கும் "ஸர்வஸம்க்ஷோபண" சக்ரமாயும் இருப்பவள் அவளே

அனந்தகோட்யண்டநாயக சங்கரநாயிகயா - கோடானுகோடி அண்டங் களின் நாயகரான பரமேச்வரனின் பார்யை.

அஷ்டவர்காத்மக குப்ததரயா வரயா - எட்டு வர்க்கங்களாக இருக்கும் "குப்ததரா" என்ற சிறந்த யோகினீ தேவியாக இருப்பவளும் அவளே.

அனங்காத்யுபாஸிதாயா - மன்மதன் போன்றவர்களால் உபாஸிக் கப்பட்டவள்.

அஷ்டதளாப்ஜஸ்திதயா - *எட்டு இதழ்கள் கொண்ட தாமரை மீது அமர்ந்தவள். (ஸ்ரீ சக்ரத்தின் ஒரு வெளிச்சுற்று எட்டு இதழ்களைக் கொண்டது)*

தனுர்பாணதரகரயா - *இரண்டு கைகளில் வில், அம்பு ஏந்தியவள்.*

தயா ஸுதா ஸாகரயா - *கருணை என்ற அமுதப் ப்ரவாஹமாகவே இருப்பவள்.*

இத்துணை சிறப்புகள் கொண்ட ஸ்ரீ கமலாம்பிகையின் கடாக்ஷத்தைப் பெற்ற நான் ஆத்மபோதம் வரப்பெற்று பரிபூர்ணமான பரஹ்மமாக, ஸச்சிதானஸ்வரூபியாக நான் இருக்கிறேன். (பல்லவி)

இந்த கீர்த்தனத்தின் பலஶ்ருதி, விசேஷ ப்ரபாவங்கள்

தேவியின் கடாக்ஷம் சித்திக்கும். ஆத்ம ஞானம் கைவரப்படும். எல்லா துக்கங்களும் விலகிவிடும். ஊமையாக இருப்பவன் பேசத் தொடங்கிவிடுவான். அதாவது, இப்படிப்பட்ட பல அதிசயங்களும் ஏற்படக்கூடும். உலகத்தையே கலக்கக்கூடிய அபூர்வ சக்திகள் சித்திக்கும். அம்பிகையின் கருணை வெள்ளம் அமுதப்ரவாகமாக இருக்கும். பேரானந்தப் பெருவாழ்வு கிடைக்கப்பெறும்.

★ ★ ★

நான்காவது ஆவரணம்

सर्वसौभाग्यदायक चक्रम्

"ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரம்"



(பதினான்கு சிறு முக்கோணங்களால் சூழப்பட்ட அறுகோணம்)

7. நான்காவது ஆவரண கீர்த்தனம்

"கமலாம்பிகாயை..."

"कमलाम्बिकायै"

(चतुर्थावरणकीर्तनम्)

।। काम्भोजिरागे अटताळेन गीयते ।।

पल्लवी

कमलाम्बिकायै कनकांशुकायै
कर्पूरवीटिकायै नमस्ते नमस्ते ।। क ।।

अनुपल्लवी

कमलाकान्तानुजायै कामेश्वर्यै अजायै
हिमगिरितनुजायै ह्रींकार पूज्यायै
कमलानगर विहारिण्यै खलसमूहसंहारिण्यै
कमनीयरत्नहारिण्यै कलिकल्मष परिहारिण्यै ।। क ।।

चरणम्

सकलसौभाग्यदायकाम्भोजचरणायै
संक्षोभिण्यादि शक्तियुत चतुर्थावरणायै
प्रकट चतुर्दश भुवनभरणायै
प्रबलगुरुगुह संप्रदायान्तः करणायै
अकळङ्करूपवर्णायै अपर्णायै सुपर्णायै
सुकरधृत चापबाणायै शोभनकरमनुकोणायै
सकुंकुमादिलेपनायै चराचरादिकल्पनायै
चिकुर विजित नीलघनायै चिदानन्द पूर्णधनायै ।। क ।।

"கமலாம்பிகாயை..."

(நான்காவது ஆவரண கீர்த்தனம்)

(காம்போஜி ராகத்தில் அடதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

கமலாம்பிகாயை கநகாம்ஶுகாயை
கர்பூரவீடிகாயை நமஸ்தே நமஸ்தே ॥ கம ॥

அநுபல்லவி

கமலாகாந்தாநுஜாயை காமேஶ்வர்யை அஜாயை
ஹிமகிரிதநுஜாயை ஹ்ரீம்கார பூஜ்யாயை

மத்யமம்

கமலாநகர விஹாரிண்யை கலஸமூஹஸம்ஹாரிண்யை
கமநீயரத்நஹாரிண்யை கலிகல்மஷ பரிஹாரிண்யை ॥ கம ॥

சரணம்

ஸகலஸௌபாக்யதாயகாம்போஜசரணாயை
ஸம்க்ஷோபிண்யாதி ஶக்தியுத சதுர்தாவரணாயை
ப்ரகட சதுர்தஶ புவநபரணாயை
ப்ரபலகுருகுஹ ஸம்ப்ரதாயாந்த: கரணாயை
அகளங்கரூபவர்ணாயை அபர்ணாயை ஸுபர்ணாயை
ஸுகரத்ருத சாபபாணாயை ஶோபநகரமநுகோணாயை

மத்யமம்

ஸகுங்குமாதிலேபநாயை சராசராதிகல்பநாயை
சிகுர விஜித நீலகநாயை சிதாநந்த பூர்ணகநாயை ॥ கம ॥

இந்த நான்காவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வ ஸௌபாக்ய தாயக" *சக்ரமாகும். இதன் யோகினீ தேவதையின் பெயர்* "ஸம்ப்ரதாய யோகினீ"*யாகும். இதன்* சக்தி தேவதைகள் - *ஸர்வ ஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ, ஸர்வஹ்லாதினீ, ஸர்வஸம்மோஹினீ, ஸர்வஸ்தம்பினீ, ஸர்வஜ்ரும்பிணீ, ஸர்வசங்கரீ, ஸர்வரஞ்ஜனீ, ஸர்வோன்மாதினீ, ஸர்வார்த்தஸாதகீ, ஸர்வ ஸம்பத்தி*

பூரணீ, ஸர்வமந்த்ரமயீ, ஸர்வத்வந்த்வக்ஷயம்கரீ என்பனவாகும். (இந்த சக்தி தேவதைகளின் ப்ரத்யேகமான சக்தி ப்ரபாவங்கள் அவரவர்களுடைய பெயர்களிலிருந்தே அறிந்து கொள்ளலாம்).

இந்த ஆவரணத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப (அதாவது நான்காவது) ஸாஹித்யத்தில் **விபக்தி** **ப்ரயோகம்** நான்காவது வேற்றுமையாகும். இது ஸ்ரீ தீக்ஷிதரின் பூடக காவ்யப்ரயோகமாகும்.

பதவுரை

பல்லவி

கமலாம்பிகாயை -அன்னை கமலாம்பிகைக்கு,

கனகாம்ஶுகாயை --தங்க சரிகையுடன் கூடிய பட்டுப்புடவை உடுத்தியவளுக்கு

கர்பூரவீடிகாயை -பச்சைக்கற்பூரம் முதலான வாசனாதித்ரவ்யங்கள் கலந்த தாம்பூலத்தை மெல்பவளுக்கு

நமஸ்தே நமஸ்தே -உமக்கு நமஸ்காரம், மீண்டும் உமக்கு வந்தனம்.

அனுபல்லவி

கமலாம்பிகையின் அடைமொழி வர்ணனைகள்

கமலாகாந்தானுஜாயை -லக்ஷ்மீ காந்தனான மஹாவிஷ்ணுவின் தங்கை.

காமேச்வர்யை - காமனை வென்ற பரமசிவனின் தர்மபத்னி.

அஜாயை - பிறப்பற்றவள் (ப்ரஹ்மஸ்வரூபிணீ)

ஹிமகிரிதனுஜாயை -ஹிமவானின் புத்திரி

ஹ்ரீங்காரபூஜ்யாயை -"ஹ்ரீம்" என்ற பீஜாக்ஷர மந்த்ரத்தால் உபாஸிக்கப்பட்டவள்.

கமலாநகர விஹாரிண்யை -கமலாபுரம் என்ற திருவாரூரில் உலவிவருபவள்.

கலஸமூஹ ஸம்ஹாரிண்யை - தீயவர்களை அழிப்பவள்.

கமனீய ரத்ன ஹாரிண்யை - அழகான ரத்ன ஹாரத்தை அணிந்தவள்.

கலிகல்மஷ பரிஹாரிண்யை -கலிதோஷங்கள் அனைத்தையும் அகற்றுபவள்.

சரணம்

ஸகல ஸௌபாக்யதாயகாம்போஜ சரணாயை - ஸமஸ்த ஸௌபாக்யங்களையும் அளிக்கவல்ல திருவடித் தாமரைகளையுடையவள்

ஸம்க்ஷோபிண்யாதி ஶக்தியுத சதுர்த்தாவரணாயை - ஸம்க்ஷோபிணீ முதலான சக்தி தேவதைகள் உறைந்திருக்கும் நான்காவது ஆவரணத்தில் இருப்பவள். (இவர்களின் பெயர்ப்பட்டியல் தொடக்கத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ப்ரகட சதுர்தஶ புவனபரணாயை -ப்ரசித்தமான பதினான்கு புவனங்களையும் தாங்கியிருப்பவள்.

ப்ரபல குருகுஹ ஸம்ப்ரதாயாந்த - கரணாயை - குருகுஹனுடைய பிரசித்தமான ஸம்ப்ரதாயங்களில் (வழிபாட்டு மரபுகளில்) ஈடுபாடு கொண்டவள்.

அகலங்கரூபவர்ணாயை - மாசற்ற உருவமும், நிறத்தையும் கொண்டவள்.

அபர்ணாயை - "அபர்ணா" என்ற சிறப்புப் பெயரைக் கொண்டவள்.

ஸுபர்ணாயை - "ஸுபர்ணா" என்ற தெய்வீகத் திருமகளாக இருப்பவள். "ஹம்ஸ" பக்ஷியாக அவதரித்து ஞானோபதேசம் செய்தவள்.

ஸுகர த்ருத சாப பாணாயை - அழகான கைகளில் வில், அம்பு ஏந்தியவள்.

ஶோபனகர மனுகோணாயை - நலன்களை அளிக்கும் பதினான்கு மனுகோணங்களை (ஸ்ரீ சக்ரத்தின் சில முக் கோணங்கள்) உடையவள்.

ஸகுங்கமாதிலேபனாயை - குங்குமப்பூ முதலான வாசனைத்ரவ்யங்களின் பூச்சு கொண்டவள்.

சராசராதி கல்பனாயை -சராசர ப்ரபஞ்சம் அனைத்தையும் தனது சங்கல்பத்தினாலேயே ஸ்ருஷ்டி செய்தவள்.

சிகுரவிஜித நீல கனாயை -கார் மேகத்தை வென்ற அழகான, கருருமையான கூந்தலையுடையவள்.

சிதானந்த பூர்ண கனாயை -அகண்டாகாரமான, பரிபூரணமான, சிதானந்தமே (பனிக்கட்டி போன்று) உறைந்துவிட்டதைப் போன்ற திருவடிவைக் கொண்டவள்.

இத்தனை சிறப்புகள் கொண்ட கமலாம்பிகைக்கு, மீண்டும் மீண்டும் நமஸ்காரம் (பல்லவி)

இந்த கீர்த்தனையின் விசேஷ மகத்துவ சக்திகள்

தீய சக்திகள் அனைத்தும் அழிந்து போகும். கலிதோஷங்கள் யாவும் நீங்கும். ஸகல ஸௌபாக்யங்களும் கிட்டும். ஸம்க்ஷோபனம், வித்ராவணம், ஆகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உன்மாதனம் முதலான மந்த்ர சக்திகள் கைகூடும். காரியங்கள் வெற்றிகரமாக கைகூடும். சகல ஸம்பத்துகளும் கிடைக்கப்பெறும். மரபு முறையான வழிபாடுகளில் நாட்டம் ஏற்படும்.

★ ★ ★

ஐந்தாவது ஆவரணம்

सर्वार्थसाथक चक्रम्

"ஸர்வார்த்த ஸாதக சக்ரம்"



(பத்து சிறு முக்கோணங்களால்
சூழப்பட்ட ஷட்கோணம்)

8. ஐந்தாவது ஆவரண கீர்த்தனம்

"ஸ்ரீ கமலாம்பாயா..."

"श्रीकमलाम्बाया: परं न हि रे"

(पंञ्चमावरण कीर्तनम्)

।। भैरविरागे झंपताळेन गीयते ।।

पल्लवी

श्रीकमलाम्बाया: परं नहि रे रे चित्त
क्षित्यादि शिवान्त तत्वस्वरूपिण्या: ।। श्री ।।

अनुपल्लवी

श्रीकण्ठविष्णुविरिञ्चादि जनयित्रिया:
शिवात्मकविश्वकर्त्रिया: कारयित्रिया:
श्रीकर बहिर्दशार चक्रस्थित्यास्सेवित-
भैरवी भार्गवी भारत्या: ।। श्री ।।

चरणम्

नादमय सूक्ष्मरूप सर्वसिद्धिप्रदादि
दशशक्त्याराधितमूर्ते: श्रोत्रादिदशकरणा-
त्मककुलकौलिकादि बहुविधोपासितकीर्ते:
अभेद नित्य शुद्ध बुद्ध मुक्त सच्चिदानन्दमय परमाद्वैतस्फूर्ते:
आदिमध्यान्त रहिताप्रमेय गुरुगुहमोदित
सर्वार्थ साधकस्फूर्ते:
मूलादिनवाधार व्यावृत्त दशध्वनि भेदज्ञ
योगिबृन्द संरक्षण्या: अनादिमायाविद्या
कार्यकारण विनोदकरणपटुतरकटाक्ष
वीक्षण्या: ।। श्री ।।

"ஸ்ரீ கமலாம்பாயா..."
(ஐந்தாவது ஆவரண கீர்த்தனம்)

(பைரவி ராகத்தில் ஜம்ப தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீகமலாம்பாயா: பரம் நஹி ரே ரே சித்த
க்ஷித்யாதி ஶிவாந்த தத்த்வஸ்வரூபிண்யா: ॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

ஸ்ரீகண்டவிஷ்ணுவிரிஞ்சாதி ஜநயித்ரியா:
ஶிவாத்மகவிஶ்வகர்த்ரியா: காரயித்ரியா:

மத்யமம்

ஸ்ரீகர பஹிர்தஶார சக்ரஸ்தித்யாஸ்ஸேவித-
பைரவீ பார்கவீ பாரத்யா: ॥ ஸ்ரீ ॥

சரணம்

நாதமய ஸூக்ஷ்மரூப ஸர்வஸித்திப்ரதாதி
தஶஶக்த்யாராதிதமூர்தே: ஶ்ரோத்ராதிதஶகரணா-
த்மககுலகௌலிகாதி பஹுவிதோபாஸிதகீர்தே:
அபேத நித்ய ஶுத்த புத்த முக்த ஸச்சிதாநந்தமய பரமாத்வைதஸ்பூர்தே:
ஆதிமத்யாந்த ரஹிதாப்ரமேய குருகுஹமோதித
ஸர்வார்த ஸாதகஸ்பூர்தே:

மத்யமம்

மூலாதிநவாதார வ்யாவ்ருத்த தஶத்வநி பேதஜ்ஞ
யோகிப்ருந்த ஸம்ரக்ஷண்யா: அநாதிமாயா வித்யாகார்ய
காரண விநோதகரணபடுதரகடாக்ஷ-
வீக்ஷண்யா: ॥ ஸ்ரீ ॥

"ஸ்ரீ கமலாம்பாயா..."

இந்த ஐந்தாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வார்த்த ஸாதக சக்ரம்" என்பதாகும். இதன் யோகினீ தேவியின் பெயர் "குலோத் தீர்ணா யோகினீ" என்பதாகும். இதன் சக்தி தேவியர்கள்-ஸர்வ ஸித்திப்ரதா, ஸர்வஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரீ, ஸர்வமங்கள காரிணீ, ஸர்வகாமப்ரதா, ஸர்வதுக்கவிமோசினீ, ஸர்வ ம்ருத்யு ப்ரசமனீ, ஸர்வவிக்னநிவாரிணீ, ஸர்வாங்கஸுந்தரீ, ஸர்வ ஸௌ பாக்யதாயினீ. (இந்த சக்தி தேவியர்களின் சக்தி ப்ரபாவங்களை அவர்களின் பெயர்களைக் கொண்டே ஊஹித்தறியலாம்).

இந்த கீர்த்தனத்தின் ஸாங்கேதிக விபக்தி ப்ரயோகம் ஐந்தாவது வேற்றுமை (5-வது ஆவரணம் என்பதனை ஸூசகப்படுத்த).

பதவுரை

பல்லவி

ரே ரே சித்த - ஓ, ஓ, மனமே!

க்ஷித்யாதி ஶிவாந்த தத்த்வ ஸ்வரூபிண்யா: - பஞ்சபூதங்கள் என்ற ஜடப்ரபஞ்சம் தொடங்கி சிவம் என்ற சைதன்ய ப்ரஹ்மம் வரையிலான எல்லா தத்துவங்களின் உருவமாகவுள்ள

ஸ்ரீ கமலாம்பாயா: - ஸ்ரீ கமலாம்பிகையைக் காட்டிலும்

பரம் ந ஹி -உயர்ந்ததான தத்துவம் எதுவும் நிச்சயமாக இல்லை.

அனுபல்லவி

ஸ்ரீகண்ட விஷ்ணுவிரிஞ்சாதி ஜனயித்ரியா: - அவள்தான் சிவன், விஷ்ணு, ப்ரஹ்மா என்ற மும்மூர்த்திகளைப் படைத்தவள்.

ஶிவாத்மக விஶ்வகர்த்ரியா - காரயித்ரியா: - அவள்தான் சிவமய மான இந்த புவனங்கள் அனைத்தையும் ஸ்ருஷ்டி செய்து, அவற்றை இயங்கவும் செய்கிறாள்.

ஸ்ரீகர பஹிர் தஶார சக்ரஸ்தித்யா: - பத்து தளங்களைக் கொண்ட தசார சக்ரத்தின் வெளிப்புறம் அவள் இருப்பைக்

கொண்டிருக்கிறாள். அந்த சக்ரம் எல்லா ஐசுவரியங் களையும் உண்டுபண்ணக் கூடியது.

ஸேவித பைரவீ, பார்கவீ, பாரத்யா: -அவளை பார்வதி, லக்ஷ்மி, ஸரஸ்வதி என்ற முப்பெரும் தேவியர்களும் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரணம்

நாதமய ஸூக்ஷ்மரூப ஸர்வஸித்திப்ரதாதி தஶ ஶக்த்யாராதித மூர்தே: - அவளை ஸர்வஸித்தி ப்ரதா முதலான பத்து சக்தி தேவதைகள் ஆராதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாத மயமாகவும், ஸூக்ஷ்மமான உருவங் களைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். (பத்து சக்தி தேவியர்களின் பெயர்ப்பட்டியல் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது).

ஶ்ரோத்ராதி தஶகரணாத்மக குளகௌளிகாதி பஹுவித உபாஸிதகீர்தே: - தேவியின் உபாஸனையில் குள மார்க்கம், கௌளிகமார்க்கம் என்ற இரண்டு வழிபாட்டு முறைகள் உண்டு. இவைகள் ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்த்ரியங்கள் ஆகிய சக்திகளின் வடிவங்க ளாக அமைந்தன. இப்படிப்பட்ட பத்து சக்திகளினால் உபாஸிக்கப்பட்டு, தேவி பெரும்புகழ் பெற்றிருக்கிறாள்

அபேத நித்ய ஶுத்த புத்த முக்த ஸச்சிதானந்தமய பரமாத்வைத ஸ்பூர்தே: - அவள் அத்வைத ஞானபோதத்தின் சுடரொளியாக ப்ரகாசிக்கிறாள். அந்த ஞானபோதத்தின் அனுபவம் எப்படிப் பட்டது? வேற்றுமைகள் காண முடியாதது; அழிவற்றது; தூய்மையானது; அறிவுணர்வு கொண்டது; தளைகள் ஏதும் இல்லாமல் சுதந்திரமானது; ஸச்சிதானந்தமயமானது; எல்லாவற்றிற்கும் மேலாகவும், தலைசிறந்ததாகவுமானது. தனக்கு, இணையானது வேறு ஒன்று என்ற இருமைகள் காணமுடியாதது.

ஆதி மத்யாந்த ரஹிதாப்ரமேய குருகுஹ மோதித ஸர்வார்த்த ஸாதக ஸ்பூர்தே: - அவள் தோற்றம், முடிவு முதலானவைகள் இல்லாதவள். அளப்பிற்கரியவள். குருகுஹனிடத்தில் பிரியம் கொண்டவள். எல்லா புருஷார்த்தங்களையும் நிறைவேற்றிக் கொடுக்க ஆர்வம் கொண்டவள்.

மூலாதி நவாதார வ்யாவ்ருத்த தசத்வனி பேதஜ்ஞ யோகிப்ருந்த ஸம்ரக்ஷிண்யா: - அவள், யோகசாஸ்த்ரம் பயின்ற ஸாதகர்களின் சமூகத்தை நன்கு ரக்ஷிப்பவள். அவர்களின் யோக சாதனை என்ன? நமது உடலில் மூலாதாரம் முதலான ஒன்பது ஆதார சக்தி மண்டலங்கள் இருக்கின்றன. அவற்றில் பல யோக சக்திகள் பரவியிருக்கின்றன. யோக ஸாதனை மூலம் அந்த ஸூக்ஷ்ம சக்திகளை வென்றவனுக்கு பத்துவிதமான நாத த்வனிகளின் ஒலிகள் அவன் சித்தத்தில் எழுப்பப்படுகின்றன. அவற்றின் நுட்பங்களை அவன் உணர்கிறான். இப்படிப்பட்ட அபூர்வமான யோக சக்திகளைக் கொண்ட அடியார்களை அம்பாள் ரக்ஷித்து அருளுகிறாள் என்பது கருத்து.

குறிப்பு : இங்கே குறிப்பிடப்படும் ஒன்பது ஆதாரங்களாவன - *(1) மூலாதாரம் (2) ஸ்வாதிஷ்டானம் (3) மணிபூரகம் (4) அனாஹதம் (5) மத்யமா (6) வஜ்ர கண்டா (7) லம்பிகா (8) விசுத்தி (9) அருணா.*

அனாதிமாயா வித்யா கார்ய காரண வினோத கரணபடுதர கடாக்ஷவீக்ஷிண்யா: - அன்னையிடம் மாயா சக்தி, அவித்யா சக்தி என்று இரண்டு சக்திகள் இருக்கின்றன. மாயாசக்தியின் மூலம் ப்ரபஞ்சத்தைப் படைக்கிறாள். அவித்யா சக்தியின் மூலம் ஜீவர்களை கட்டுறச் செய்கிறாள். இந்த சக்திகளே எல்லா இயக்கங்களுக்கும் காரணமாகவும், காரியமாகவும் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஆச்சரியமான லீலைகளை தேவி தனது கடைக்கண் பார்வைகளாயே சாதுர்யமாக நடத்திக் கொண்டிருக்கிறாள்.

இவ்வாறெல்லாம், மேலே வருணித்தபடி திவ்ய ப்ரபாவங்களைக் கொண்ட கமலாம்பிகையைத் தவிர மேலான எந்த தெய்வமும் உலகில் நிச்சயம் இல்லை. சித்தமே! இதனை நன்கு தெரிந்துகொள் (பல்லவி)

இந்த கீர்த்தனையில் விசேஷ பலன்கள்

சக்ரத்தின் பெயர் "ஸர்வார்த்த ஸாதகம்" என்பதால் எல்லா புருஷார்த்தங்களும் நிறைவேறும் என்பதை ஸூசகப்படுத்தப் படுகிறது. யோகினீ தேவியர்களின் பெயர்கள் குறிப்பிட்டபடி — சித்திகள், ஸம்பத், ப்ரியம், மங்களம், விருப்பங்கள், துக்க நிவாரணம், அபம்ருத்யு தோஷம் நீங்கல், சௌந்தர்யம், ஸௌபாக்யம் முதலான பல அம்சங்கள் கைவரப்படக்கூடும். முப்பெரும் தேவியர்களின் கடாக்ஷம் பெறப்படும். பல அபூர்வமான யோக சித்திகள் கிட்டக் கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆத்ம ஞானம், அத்வைதானுபவம், ஸச்சிதானந்தப் பேறு முதலியனவைகள் கைகூடும்.

★ ★ ★

9. ஆறாவது ஆவரண கீர்த்தனம்

"கமலாம்பிகாயா:"

"कमलाम्बिकाया:"

(षष्ठ्यावरण कीर्तनम्)

।। पुन्नागवराळिरागे रूपकताळेन गीयते ।।

पल्लवी

कमलाम्बिकायास्तव भक्तोहं शंकर्या:
श्रीकर्या: संगीतरसिकाया: श्री ।। क ।।

अनुपल्लवी

सुमशरेक्षु कोदण्ड पाशाङ्कुशपाण्या:
अतिमधुरतरवाण्या: शर्वाण्या: कल्याण्या:
रमणीय पुन्नागवराळि विजितवेण्या: श्री ।। क ।।

चरणम्

दशकलात्मक वह्निस्वरूप प्रकाशान्तर्दशार
सर्वरक्षाकर चेक्रेश्वर्या: त्रिदशादिनुत
कचवर्गद्वयमय सर्वज्ञादि दशशक्ति समेत मालिनी-
चक्रेश्वया: त्रिदश विंशद्वर्णगर्भिणी कुण्डलिन्या:
दशमुद्रा समाराधित कौलिन्या:
दशरथादिनुत गुरुगुह जनकशिवबोधिन्या:
दशकरण वृत्ति मरीचि निगर्भयोगिन्या:
श्री ।। क ।।

ஆறாவது ஆவரணம்

सर्वरक्षाकर चक्रम्

"ஸர்வ ரக்ஷாகர சக்ரம்"



(பத்து சிறு முக்கோணங்களால் சூழப்பட்ட அறுகோணம்)

"கமலாம்பிகாயா:"

(ஆறாவது ஆவரண கீர்த்தனம்)

(புன்னாகவராளி ராகத்தில் ரூபகதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

கமலாம்பிகாயாஸ்தவ பக்தோ(அ)ஹம் ஶங்கர்யா:
ஸ்ரீகர்யா: ஸங்கீதரஸிகாயா: ஸ்ரீ ॥ கம ॥

அநுபல்லவி

ஸுமஶரேக்ஷு கோதண்ட பாஶாங்குஶபாண்யா:
அதிமதுரதரவாண்யா: ஶர்வாண்யா: கல்யாண்யா:

மத்யமம்

ரமணீய புந்நாகவராளி விஜிதவேண்யா: ஸ்ரீ ॥ கம ॥

சரணம்

தஶகலாத்மக வஹ்நிஸ்வரூப ப்ரகாஶாந்தர்தஶார
ஸர்வரக்ஷாகர சக்ரேஶ்வர்யா: த்ரிதஶாதிநுத
கசவர்கத்வயமய ஸர்வஜ்ஞாதி தஶஶக்தி ஸமேத
மாலினீ சக்ரேஶ்வர்யா: த்ரிதஶ விம்ஶத்வர்ண கர்பிணீ குண்டலிந்யா:
தஶமுத்ரா ஸமாராதித கௌலிந்யா:

மத்யமம்

தஶரதாதிநுத குருகுஹ ஜநகஶிவபோதிந்யா:
தஶகரண வ்ருத்தி மரீசி நிகர்பயோகிந்யா: ஸ்ரீ ॥ கம ॥

கமலாம்பிகாயா: தவ

இந்த ஆறாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வரக்ஷாகர சக்ரம்" எனப்படும். இதன் யோகினி தேவதையின் பெயர் "நிகர்ப்ப யோகினீ" என்பதாகும். இதன் "சக்தி தேவியர்கள்" ஸர்வஜ்ஞா, ஸர்வசக்தா, ஸர்வைச்வர்ய ப்ரதாயினீ, ஸர்வஜ்ஞானமயீ, ஸர்வ வ்யாதி வினாசிநீ, ஸர்வாதார ஸ்வரூபா, ஸர்வபாபஹரா, ஸர்வானந் தமயீ, ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப்ஸித பலப்ரதா ஆகிய

பதின்மர். இவர்களின் பெயர்களிலிருந்தே இவர்களின் சக்தி ப்ரபாவங்களை ஊகித்துக் கொள்ளலாம்.

இந்த ஆவரணத்தின் ஸங்க்யையான ஆறு என்பதற்கு ஏற்ப, இதில் ஆறாவது வேற்றுமை பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

பதவுரை

பல்லவி

ஸ்ரீகர்யா - - ஐசுவரியங்களை உண்டு பண்ணக்கூடியவளும்

ஸங்கீதரஸிகாயா: - ஸங்கீதத்தில் ரஸனையார்வம் கொண்டவளும்

ஶங்கர்யா: - சிவசங்கரனாரின் மனைவியுமான

கமலாம்பிகாயா: - கமலாம்பிகையான

தவ -தங்களுடைய

பக்தோ(அ)ஹம் -பக்தன் நான்.

அனுபல்லவி

ஸுமஶரேக்ஷு கோதண்ட பாசாங்குஶ பாண்யா: - தேவியின் (நான்கு) திருக்கங்களில் புஷ்பபாணம், கரும்பு வில், பாசம், அங்குசம் ஆகியவைகள் இருக்கின்றன.

அதிமதுரதரவாண்யா: - அவளுடைய பேச்சுகள் மிக, மிக இனிமையாக இருக்கும்.

ஶர்வாண்யா: - பரமசிவனுக்கு "ஶர்வன்" என்ற பெயர் உண்டு. அவருடைய பத்னீ என்று குறிப்பிடும் வண்ணம் அம்பாளுக்கு "ஶர்வாணீ" என்ற நாமதேயம் உண்டு.

கல்யாண்யா: - மங்கள ஸ்வரூபிணீ

ரமணீய புன்னாகவராளி விஜித வேண்யா: - புன்னை மர மலர்களில் வசிக்கும் கருவண்டை வென்றுவிட்ட அழகிய, கருமையான கூந்தலையுடையவள். (இந்த கீர்த்தனத்தின் ராகம் புன்னாகவராளி என்று மறைமுகமாக சூசகப்படுத்தப் படுகிறது).

சரணம்

தச கலாத்மக வஹ்னிஸ்வரூப ப்ரகாஶாந்தர் - தஶார ஸர்வர க்ஷாகர சக்ரேஶ்வர்யா: - இவள் ஆட்சி புரியும் இந்த சக்ரத்திற்கு ஸர்வரக்ஷாகர சக்ரம் என்பதாகப் பெயர். இதில் பத்து ஆரங்கள் இருக்கின்றன. மேலும் இது, பத்து கலைகளைக் கொண்ட அக்னிஜ்வாலைகளின் மத்தியில் பிரகாசித்து இருக்கிறது.

த்ரிதஶாதிநுத கசவர்கத்வய மய ஸர்வஜ்ஞாதி தஶ ஶக்தி ஸமேத மாலினீ சக்ரேச்வர்யா: - மேலும் இவள் மாலினீ சக்ரம் என்றும் அறியப்பட்ட இந்த சக்ரத்தில் ஆட்சி புரி கிறாள். இந்த சக்ரத்தில் ''ஸர்வஜ்ஞா'' முதலான பத்து சக்தி தேவதைகள் குடி கொண்டிருக்கின்றனர் (இவர்களுடைய பெயர்கள் முன்பே கொடுக்கப்பட்டிருக்கின்றன). இவர்கள் ''க'' வர்கம், ''ச'' வர்கம் ஆகியவற்றின் ஸ்வரூபங்களைக் கொண்டவர்கள். இவர்களை தேவர்கள் பாராட்டியிருக் கிறார்கள்.

த்ரிதஶ விம்ஶத்வர்ண கர்ப்பிணீ குண்டலின்யா: - இவளே ''குண்டலினீ'' சக்தியாவும் பரிணமிக்கிறாள். அப்பொழுது இவள் மந்த்ர வடிவமான ஐம்பது அக்ஷரங்களை தன்னகத்தே உள்ளடக்கியிருக்கிறாள்.

தஶமுத்ரா ஸமாராதித கௌலின்யா: - இவளே ''கௌலினீ'' என்ற மந்த்ர சக்தி ஸ்வரூபிணியாகவும் இருக்கிறாள். அப் பொழுது இவள் பத்துவிதமான யோகமுத்ரைகளால் ஆராதிக்கப்படுகிறாள்.

தஶரதாதி நுத குருகுஹஜனக ஶிவபோதின்யா: - இவள் தசரதர் போன்ற மஹாசக்ரவர்த்திகளால் ஆராதிக்கப்பட்டவள். குரு குஹனாம் முருகப் பெருமானுக்கு அன்னை. சிவஜ்ஞான போத ரூபிண்யாகவும் இவள் இருக்கிறாள்.

தஶகரண வ்ருத்தி மரீசி நிகர்ப்ப யோகின்யா: - இவளே ''நிகர்ப்ப யோகினீ'' என்ற யோகினீ தேவதையாக

இருக்கிறாள். அப்பொழுது இவள் பத்து இந்த்ரியங் களின் ஒளிக்கிரணங்களாகவும் அவற்றின் (பத்துவித) இயக்கங்களாகவும் இருக்கிறாள்.

மேலே குறிப்பிடப்பட்ட அத்தனை சிறப்புகளையும் கொண்ட கமலாம்பிகையின் பக்தன் நான் (பல்லவி) என்பது கீர்த்தனத்தின் திரண்ட கருத்து.

கீர்த்தனத்தின் விசேஷ பலன்கள்

அம்பிகையின் கடாக்ஷத்தால் ஐசுவரியங்கள் பெருகும். ஸங்கீத ஞானம் வளரும். குரல், பேச்சு முதலியன இனிமை கூடியிருக்கும். மங்களங்கள் உண்டாகும். கர்மேந்திரியங்கள், ஞானேந்த்ரியங்கள் திறமையாக இயங்கும். வ்யாதி நாசனம் ஏற்படும். மனோரதங்கள் கைகூடும்.

★ ★ ★

10. ஏழாவது ஆவரண கீர்த்தனம்

"ஸ்ரீ கமலாம்பிகாயாம்"

"श्रीकमलाम्बिकायाम्"

(सप्तमावरणकीर्तनम्)

।। सहानारागे त्रिपुटताळेन गीयते ।।

पल्लवी

श्री कमलाम्बिकायां भक्तिं करोमि
श्रितकल्पवाटिकायां चण्डिकायां जगदम्बिकायाम् ।। श्री ।।

अनुपल्लवी

राकाचन्द्रवदनायां राजीवनयनायाम्
पाकारिनुत चरणायां आकाशादि किरणायां
ह्रींकार विपिन हरिण्यां ह्रींकार सुशरीरिण्याम्
ह्रींकार तरुमञ्जर्यां ह्रींकारेश्वर्यां गौर्याम् ।। श्री ।।

चरणम्

शरीरत्रय विलक्षण सुखतर स्वात्मानु भोगिन्याम्
विरिञ्चि हरीशान हरिहय वेदित रहस्य योगिन्याम्
परादि वाग्देवता रूपवशिन्यादि विभागिन्याम्
चरात्मक सर्वरोगहर निरामय राजयोगिन्याम्
करधृत वीणावादिन्यां कमलानगर विनोदिन्याम्
सुरनर मुनिजन मोदिन्यां गुरुगुह वरप्रसादिन्याम् ।। श्री ।।

ஏழாவது ஆவரணம்

सर्व रोग हर चक्रम्

"ஸர்வ ரோக ஹர சக்ரம்"



(எட்டு சிறு முக்கோணங்களால்
சூழப்பட்ட ஷட்கோணம்)

"ஸ்ரீ கமலாம்பிகாயாம்"

(ஏழாவது ஆவரண கீர்த்தனம்)

(ஸஹானா ராகத்தில் த்ரிபுட தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீ கமலாம்பிகாயாம் பக்திம் கரோமி
ஶ்ரிதகல்பவாடிகாயாம் சண்டிகாயாம் ஜகதம்பிகாயாம் ॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

ராகாசந்த்ரவதநாயாம் ராஜீவநயநாயாம்
பாகாரிநுத சரணாயாம் ஆகாஶாதி கிரணாயாம்

மத்யமம்

ஹ்ரீம்கார விபிந ஹரிண்யாம் ஹ்ரீம்கார ஸுஶரீரிண்யாம்
ஹ்ரீம்கார தருமஞ்ஜர்யாம் ஹ்ரீம்காரேஶ்வர்யாம் கௌர்யாம் ॥ ஸ்ரீ ॥

சரணம்

ஶரீரத்ரய விலக்ஷண ஸுகதர ஸ்வாத்மாநு போகிந்யாம்
விரிஞ்சி ஹரீஶாந ஹரிஹய வேதித ரஹஸ்ய யோகிந்யாம்
பராதி வாக்தேவதா ரூபவஶிந்யாதி விபாகிந்யாம்
சராத்மக ஸர்வரோகஹர நிராமய ராஜயோகிந்யாம்

மத்யமம்

கரத்ருத வீணாவாதிந்யாம் கமலாநகர விநோதிந்யாம்
ஸுரநர முநிஜந மோதிந்யாம் குருகுஹ வரப்ரஸாதிந்யாம் ॥ ஸ்ரீ ॥

"ஸ்ரீ கமலாம்பிகாயாம்"

இந்த ஏழாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வரோகஹர" *சக்ரம் என்பதாகும். இதன் யோகினீ தேவதையின் பெயர்* "ரஹஸ்ய யோகினீ". *இதன்* "சக்தி தேவியர்கள்" *வசினீ, காமேச்வரீ, மோதினீ, விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌளினீ. இவர்கள் எட்டு பேர்கள் - இவர்கள் "வாக்தேவியர்கள்" என்றும் அறியப்படு கிறார்கள்.*

இந்த ஆவரணத்தின் ஸங்க்யையான ஏழு என்பதனை ஸூசகப்படுத்தும் வகையில் ஏழாவது வேற்றுமையில் அம்பாளின் நாமங்கள் ப்ரயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பதவுரை

பல்லவி

ஜகதம்பிகாயாம் - உலகத்திற்கே தாயாகவும்

சண்டிகாயாம் - ''சண்டிகா'' என்ற புகழ்ப்பெயர் உடையவளும்

ஶ்ரித கல்பவாடிகாயாம் - தன்னை அண்டின அடியார்களுக்கு ஒரு கல்பதருக்கொடியாகவும் இருக்கும்.

ஸ்ரீ கமலாம்பிகாயாம் - ஸ்ரீ கமலாம்பிகையினிடத்தில்

பக்திம் கரோமி - பக்தி செய்கிறேன்.

அனுபல்லவி

ராகா சந்த்ர வதனாயாம் - அவள் திருமுகம் முழுமதியம் போன்று உள்ளது.

ராஜீவ நயனாயாம் - அவளுடைய திருக்கண்கள் தாமரை மலர் களைப் போன்றிருக்கின்றன.

பாகாரிநுத சரணாயாம் - தேவேந்த்ரனால் வணங்கப்பட்ட திருவடிகளைக் கொண்டவள்.

ஆகாஶாதி கிரணாயாம் - அவள் திருமேனியிலிருந்து புறப்பட்ட ஒளிக்கதிர்களே ஆகாயம் முதலான பஞ்ச மஹா பூதங்களாகும்.

ஹ்ரீம்கார விபித ஹரிண்யாம் - ''ஹ்ரீம்''காரம் என்ற சோலை வனத்தில் உலவும் ஒரு பெண்மானைப் போன்றவள்.

ஹ்ரீம்கார ஸுஶரீரிண்யாம் - ''ஹ்ரீம்''காரமே அவளது சுந்தரவடிவாகும்.

ஹ்ரீம்கார தருமஞ்சர்யாம் - ''ஹ்ரீம்''காரமே ஒரு மலர்ப்பூங்கொத்தாக உருவெடுத்தது போல் அவள் திருமேனியாகும்.

ஹ்ரீம் காரேஶ்வர்யாம் - "ஹ்ரீம்" என்ற பீஜாக்ஷர மந்த்ரத்திற்கு அவளே அதிஷ்டான தெய்வம்

கௌர்யாம் - "கௌரீ" என்ற பெயர்க் கீர்த்தி பெற்றவள்.

சரணம்

ஶரீரத்ரய விலக்ஷண ஸுகதர ஸ்வாத்மானு போகின்யாம் - ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம் என்ற மூன்று சரீரங்களுக்கும் அப்பாற்பட்டதாய் ஆத்ம ஸ்வரூபம் ஆனந்தமயமாக இருக்கிறது. அப்படிப் பட்ட ஸ்வாத்மானுபவ போகமே அம்பிகையின் வடிவம்.

விரிஞ்சி ஹரீஶான ஹரிஹய வேதித ரஹஸ்ய யோகின்யாம் - ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் மற்றும் ஹயக்ரீவர் முதலானோர் அறிந்து கொண்ட "ரஹஸ்ய யோகினீ" என்ற யோகினீ தேவதையும் அவளேதான்.

பராதி வாக்தேவதா ரூபவஶின்யாதி விபாகின்யாம் - பராதேவீ, வசினீதேவீ முதலான வாக் தேவியர்களாகவும், சக்தி தேவியர்களாகவும் பல வகையர்களாகப் பிரிந்து இருப்பதும் அவளுடைய திவ்யஸ்வரூபங்களே

சராத்மக ஸர்வரோகஹர நிராமய ராஜயோகின்யாம் - ஜங்கமப்ரபஞ்சமாகவும், எல்லா ரோகங்களையும் அழிக்கவல்லதாயும், ஆரோக்யத்தை உண்டு பண்ணக்கூடியதாயும் இருக்கும் "ராஜயோகம்" என்பதும் அவளது ஸ்வரூபமேயாம்.

கரத்ருதவீணாவாதின்யாம் - கையில் வீணை வாத்யத்தை வைத்துக்கொண்டு அவள் அதனை மீட்டுக் கொண்டு இருக்கிறாள்.

3 கமலா நகர விநோதின்யாம் - "கமலா நகரம்" என்ற திருவாரூரில் உலவியிருப்பதில் மிகவும் பிரியம் கொண்டவள்.

ஸுர நர முனிஜனமோதின்யாம் - *தேவர்கள், மனிதர்கள், முனிவர்கள் ஆகிய அனைத்து ஜனங்களையும் அவள் களிப்புறச் செய்கிறாள்.*

குருகுஹ வரப்ரஸாதின்யாம் - *குருகுஹனாம் முருகப் பெருமானுக்கு வரன்களை அளித்தவள்.*

''இவ்வாறெல்லாம் வருணிக்கப்பட்ட பெருமைகளைக் கொண்ட கமலாம்பிகையினிடத்தில் நான் பக்தி கொண்டிருக் கிறேன்'' (பல்லவி)

கீர்த்தனத்தின் விசேஷ பலன்கள்

விருப்பங்கள் அனைத்தும் ஈடேறும். ''ஹ்ரீம்'' என்ற பீஜாக்ஷர மஹாமந்த்ரத்தின் அபூர்வமான சக்திகள் கிடைக்கப்பெறும். தேஹாபி மானம் நீங்கி ஆத்மபோதம் தெள்ளத் தெளிவாகத் தோன்றும். வாக்தேவியர்களின் அனுக்ரஹத்தால் ஸரஸ்வதீ கடாக்ஷம் சித்திக்கும். எல்லா வியாதிகளும் நீங்கி திடகாத்திரமான ஆரோக்கியம் கிடைக்கப் பெறும்.

★ ★ ★

11. எட்டாவது ஆவரண கீர்த்தனம்

"ஸ்ரீ கமலாம்பிகே அவாவ..."

"श्रीकमलम्बिके अवाव"

(अष्टमावरणकीर्तनम्)

।। घण्टारागे आदिताळेन गीयते ।।

पल्लवी

श्रीकमलाम्बिकेऽवाव शिवे करधृत शुकशारिके ।। श्री ।।

अनुपल्लवी

लोकपालिनि कपालिनि शूलिनि लोकजननि
भगमालिनि सकृदालोकय मां सर्वसिद्धि-
प्रदायिके त्रिपुराम्बिके बालाम्बिके

चरणम्

संतप्त हेमसन्निभदेहे सदाखण्डैक रसप्रवाहे
संतापहर त्रिकोणगेहे सकामेश्वरीशक्तिसमूहे
संततं मुक्ति घण्टामणिघोषायमानकवाटद्वारे
अनन्त गुरुगुह विदिते कराङ्गुलिनखोदय
विष्णुदशावतारे अन्तःकरणेक्षु कार्मुक
शब्दादिपञ्चतन्मात्र विशिखात्यन्त रागपाश
द्वेषाङ्कुशधरकरेति रहस्योगिनीपरे ।। श्री ।।

எட்டாவது ஆவரணம்

सर्वसिद्धिप्रद चक्रम्

"ஸர்வ ஸித்திப்ரத சக்ரம்"



(நடுவில் முக்கோண வடிவம்)

"ஸ்ரீ கமலாம்பிகே அவாவ..."

(எட்டாவது ஆவரண கீர்த்தனம்)

(கண்டாராகத்தில் ஆதிதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீகமலாம்பிகே அவாவ ஶிவே கரத்ருத ஶுகஶாரிகே ॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

லோகபாலிநி கபாலிநி ஶூலிநி லோகஜநநி பகமாலிநி ஸக்ருதா

மத்யமம்

லோகய மாம் ஸர்வஸித்தி
ப்ரதாயிகே த்ரிபுராம்பிகே பாலாம்பிகே ॥ ஸ்ரீ ॥

சரணம்

ஸந்தப்த ஹேமஸந்நிபதேஹே ஸதாகண்டைக ரஸப்ரவாஹே
ஸந்தாபஹர த்ரிகோணகேஹே ஸகாமேஶ்வரீஶக்திஸமூஹே
ஸந்ததம் முக்தி கண்டாமணிகோஷாயமாநகவாடத்வாரே
அநந்த குருகுஹ விதிதே கராங்குளிநகோதய விஷ்ணுதஶாவதாரே

மத்யமம்

அந்த:கரணேக்ஷு கார்முக
ஶப்தாதிபஞ்சதந்மாத்ர விஶிகாத்யந்த ராகபாஶ
த்வேஷாங் குஶதரகரேதி ரஹஸ்யயோகிநீபரே ॥ ஸ்ரீ ॥

ஸ்ரீ கமலாம்பிகே அவாவ

இந்த எட்டாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வ ஸித்தி ப்ரத" சக்ரம் என்பதாகும். இந்த சக்ரத்தின் யோகினீ தேவதையின் பெயர் "அதிரஹஸ்ய" யோகினீயாகும். இதன் சக்திதேவியர்களின் பெயர்களாவன. பாணிநீ, சாபினீ, பாசினீ, அங்குசினீ, மஹா காமேச்வரீ, மஹா வஜ்ரேச்வரீ, மஹா பகமாலினீ என்பதாகும்.

இந்த ஆவரணத்தின் ஸங்க்யை எட்டு என்பதினால், இதன் விபக்தி ப்ரயோகங்கள் எட்டாம் வேற்றுமை (விளி வேற்றுமை)யில் வருகின்றன என்பது நோக்குதற்குரியது.

பதவுரை

பல்லவி

கரத்ருக ஶுகஶாரிகே - கையில் கிளிப்பிள்ளையை விளையாட்டுக் கருவியாக வைத்திருப்பவளே!

ஶிவே - பரமசிவனாரின் இல்லத்தரசியே!

ஸ்ரீ கமலாம்பிகே - ஸ்ரீ கமலாம்பிகையே!

அவாவ (அவ+அவ) - என்னைக் காப்பாற்று! காப்பாற்று!

அனுபல்லவி

லோகபாலினி - உலகத்தைக் காப்பவளே!

கபாலினி - கபாலத்தை கையில் ஏந்தியிருக்கும் சிவனாரின் பத்னியே!

ஶூலினி - சூலம் ஏந்தியவளே!

லோகஜனனி - ஜகன்மாதாவே!

பகமாலினி - ஸௌபாக்யங்களையே மாலைகளாக அணிந்தவளே!

ஸக்ருத் ஆலோகயமாம் - என்னை ஒரு தடவையாவது பாரம்மா!

ஸர்வஸித்தி ப்ரதாயிகே - எல்லா சித்திகளையும் அளிப்பவளே!

த்ரிபுராம்பிகே - "த்ரிபுரம்" என்ற மூன்று நகரங்களின் தலைவியே. (மனம், சித்தம், புத்தி என்ற அந்தக் கரணங்களை ஆள்பவளே! என்றும் பொருள் கொள்ளலாம்)

பாலாம்பிகே - பாலாம்பிகையே!

சரணம்

ஸந்தப்த ஹேம ஸந்நிப தேஹே! - உருக்கிவிட்ட பொன்னைப் போன்ற திருமேனியளே!

ஸதாகண்டைக ரஸப்ரவாஹே - எப்பொழுதுமே அகண்டாகார மான ஆனந்தப்ரவாஹமாக இருப்பவளே!

ஸந்தாப ஹர த்ரிகோண கேஹே! - தாபங்கள் யாவற்றையும் நீக்கிடும் முக்கோணத்தை (ஸ்ரீசக்ரம்) இல்லமாகக் கொண்டவளே!

ஸகாமேச்வரீ சக்தி ஸமூஹே - காமேச்வரீ (பாணிநீ) முதலான சக்தி தேவியர்களின் குழாம் கொண்டவளே!

ஸந்ததம் முக்தி கண்டாமணி கோஷாயமான கவாடத்வாரே! - முக்தி ஸாம்ராஜ்யத்தின் கோட்டைக் கதவுகள் எப் பொழுதும் தனது பக்தர்களுக்காக திறந்து வைக்கப் பட்டிருக்கின்றன என்ற அறிவிப்பை மணியோசை யின் மூலமாக கோஷம் செய்திருப்பவளே!

அனந்த குருகுஹ விதிதே - அனந்த ஸுப்ரஹ்மண்யன் என்ற குருகுஹனால் அறியப்பட்டவளே!

கராங்குலி நகோதய விஷ்ணுதசாவதாரே - தன்னுடைய கை விரல்களின் நகரங்களிலிருந்து விஷ்ணுவின் தசாவ தார மூர்த்தங்களைத் தோன்றச் செய்தவளே! (லலிதா ஸஹஸ்ரநாமத்தில் "கராங்குலி நகோத்பன்ன நாராயண தசாக்ருதி:" என்று வருவதை ஒப்பு நோக்கவும்.)

அந்த: கரணேக்ஷு கார்முக சப்தாதி பஞ்ச தன்மாத்ர விசிகாத் யந்த ராகபாச த்வேஷாங்குசதர கரேதி ரஹஸ்ய யோகினீ பரே - மனதை கரும்புவில்லாகவும், சப்தம் முதலான ஐந்து தன் மாத்ரைகளை பாணங்களாகவும், ஆசை என்ற உணர்வை பாசக்கயிறாகவும், த்வேஷம் என்ற உணர்வை அங்குசமாகவும் கையில் ஏந்தியிருப்பவளே! ரஹஸ்ய யோகினீ என்ற யோகினீ தேவதைக்கு வேண்டியவளே!

ஸ்ரீ கமலாம்பிகே அவ அவ - ஸ்ரீ கமலாம்பிகையே! (என்னைக்) காப்பாற்று! காப்பாற்று (பல்லவி)

இந்த கீர்த்தனத்தின் விசேஷ பலன்கள்

அம்பிகை நம்மைக் காப்பாற்ற ஓடோடி வருவாள். அம்பிகை யின் கடாக்ஷம் ஒரு தடவையாவது நம் மீது விழாமல் போகாது. ஸகல காரியங்களும் வெற்றியடையும். எல்லா தாபங்களும் விலகிவிடும். முக்தி ஸாம்ராஜ்யத்தின் கதவுகள் திறந்திருக்கும். மனம் கரும்பைப் போல் இனித்திருக்கும். புலன்கள் அனுகூலமாக இருக்கும். ஆசைகள், விரோதம் முதலான தீய சக்திகள் அழிந்துபோகும்.

★★★

ஒன்பதாவது ஆவரணம்

सर्वानन्दमय चक्रम्

"ஸர்வானந்தமய சக்ரம்"



(மையப்பகுதியில் சிறுபுள்ளி - "பிந்து")

12. ஒன்பதாவது ஆவரண கீர்த்தனம்

"ஸ்ரீ கமலாம்பா ஜயதி..."

"श्रीकमलाम्बाजयति"

(नवमावरण कीर्तनम्)

।। आहिरिरागे रूपक ताळेन गीयते ।।

पल्लवी

श्री कमलाम्बा जयति अम्बा श्री कमलाम्बा जयति
जगदम्बा श्री कमलाम्बा जयति श्रृङ्गार रस कदम्बा
मदम्बा श्री कमलाम्बा जयति चित्‌बिम्बा
प्रतिबिम्बेन्दु बिम्बा श्री कमलाम्बा जयति
श्रीपुरबिन्दुमध्यस्थ चिन्तामणि मन्दिरस्थ
शिवाकारमञ्चस्थित शिवकामेशाङ्कस्था ।। श्री ।।

अनुपल्लवी

सूकराननाद्यर्चित महात्रिपुरसुन्दरीम्
राजराजेश्वरीं श्रीकर सर्वानन्दमय-
चक्रवासिनीं सुवासिनीं चिन्तयेहम्
दिवाकर शीतकिरण पावकादि विकास करया
भीकर तापत्रयादि भेदन धुरीणतरया
पाकरिपुप्रमुखादि प्रार्थितसुकळेबरया
प्राकट्यपरापरया पालितो दयाकरया ।। श्री ।।

चरणम्

श्रीमात्रे नमस्ते चिन्मात्रे सेवित रमाहरिकाविधात्रे
वामादिशक्तिपूजित परदेवताया: सकलंजातम्
कामादि द्वादशभिरुपासित कादि-हादिसादि
मन्त्र रूपिण्या: प्रेमास्पद शिवगुरुगुह जनन्याम्
प्रीतियुक्त मच्चित्तं विलयतु ब्रह्ममय-प्रकाशिनि
नामरूपविमर्शिनि कामकला प्रदर्शिनि
सामरस्य निदर्शिनी ।। श्री ।।

"ஸ்ரீ கமலாம்பா ஜயதி..."

(ஒன்பதாவது ஆவரண கீர்த்தனம்)

(ஆஹிரி ராகத்தில் ரூபக தாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீ கமலாம்பா ஜயதி அம்பா ஸ்ரீ கமலாம்பா ஜயதி
ஜகதம்பா ஸ்ரீ கமலாம்பா ஜயதி ஶ்ருங்கார ரஸ கதம்பா
மதம்பா ஸ்ரீ கமலாம்பா ஜயதி சித்பிம்பா
ப்ரதிபிம்பேந்து பிம்பா ஸ்ரீ கமலாம்பா ஜயதி

மத்யமம்

ஸ்ரீபுரபிந்துமத்யஸ்த சிந்தாமணி மந்திரஸ்த
ஶிவாகாரமஞ்சஸ்தித ஶிவகாமேஶாங்கஸ்தா ॥ ஸ்ரீ ॥

அநுபல்லவி

ஸூகராநநாத்யர்சித மஹாத்ரிபுரஸுந்தரீம்
ராஜராஜேஶ்வரீம் ஸ்ரீகர ஸர்வாநந்தமய-
சக்ரவாஸிநீம் ஸுவாஸிநீம் சிந்தயேஹம்

மத்யமம்

திவாகர ஶீதகிரண பாவகாதி விகாஸ கரயா
பீகர தாபத்ரயாதி பேதந துரீணதரயா

பாகரிபுப்ரமுகாதி ப்ரார்திதஸுகளேபரயா
ப்ராகட்யபராபரயா பாலிதோ தயாகரயா ॥ ஸ்ரீ ॥

சரணம்

ஸ்ரீமாத்ரே நமஸ்தே சிந்மாத்ரே ஸேவித ரமாஹரிகாவிதாத்ரே
வாமாதிஶக்திபூஜித பரதேவதாயா: ஸகலம்ஜாதம்
காமாதி த்வாதஶபிருபாஸித காதி-ஹாதி-ஸாதி
மந்த்ர ரூபிண்யா: ப்ரேமாஸ்பத ஶிவகுருகுஹ ஜநந்யாம்
ப்ரீதியுக்த மச்சித்தம் விலயது

மத்யமம்

ப்ரஹ்மமய-ப்ரகாஶிநி
நாமரூபவிமர்ஶிநி காமகலா ப்ரதர்ஶிநி
ஸாமரஸ்ய நிதர்ஶிநி ॥ ஸ்ரீ ॥

"ஸ்ரீ கமலாம்பா ஜயதி..."

இந்த ஒன்பதாவது ஆவரணத்தின் சக்ரம் "ஸர்வானந்தமய" *சக்ரம் என்பதாகும். இந்த சக்ரத்தின் யோகினீ தேவதையின் பெயர்-* "பராபர ரஹஸ்ய" யோகினீ *என்பதாகும்.* சக்தி தேவியர்கள் *வாமாதியர்கள் என்று கூறப்படுகிறது.*

இந்த ஆவரணத்தின் ஸாஹித்யத்தில் எல்லா விபக்தி ப்ரயோகங்களும் (எட்டு வேற்றுமைகள்) கையாளப்படுகின்றன. (ஒன்பதாவது வேற்றுமை என்பதும் கிடையாதல்லவா?). இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அம்பிகையின் எட்டுவிதமான அருட்காட்சிகளை கண்டுகளித்து ஸ்ரீ தீக்ஷிதர் இந்த கீர்த்தனத்தை, ஒரு ஸமஷ்டி கீர்த்தனமாக அமைத்திருக்கிறார். இதன் தொடர்பாக எட்டு காட்சிகளும் எட்டு வேற்றுமைகளில் இந்த ஒரே பாடலில், தொடர்ச்சியாக பதப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது.

பதவுரை

பல்லவி

(1) முதலாவது அருட்காட்சி -"ஸ்ரீபுர பிந்து மத்யஸ்தா" *(முதல் வேற்றுமை பதங்கள்)*

ஸ்ரீ கமலாம்பா ஜயதி - ஸ்ரீ கமலாம்பாள் வெற்றி வாகையுடன் விளங்குகிறாள்!

அம்பா ஸ்ரீ கமலாம்பாஜயதி - அன்னை ஸ்ரீ கமலாம்பாள் ஜயகோஷத்துடன் விளங்குகிறாள்!

ஜகதம்பா ஸ்ரீ கமலாம்பா ஜயதி - உலகங்களுக்கு தாயாக விளங்கும் ஸ்ரீ கமலாம்பாள், போற்றி! போற்றி!

ஶ்ருங்கார ரஸ கதம்பா - அவள் ச்ருங்கார ரஸத்தின் ஒரு கலவை யாகவே இருக்கிறாள்!

மதம்பா - அவள் எனக்கு அம்மா!

ஸ்ரீ கமலாம்பா ஜயதி - ஸ்ரீ கமலாம்பாள் மேன்மேலும் ஜயசீலத் துடன் விளங்குகிறாள்!

சித்பிம்பா ப்ரதிபிம்பேந்து பிம்பா - சித்தத்தில் பூர்ண சந்திரனின் பிரதிபலிப்பாக தண்ணொளி வட்டத்துடன் அவள் இருக்கிறாள்.

ஸ்ரீ கமலாம்பா ஜயதி - அப்படிப்பட்ட ஸ்ரீ கமலாம்பாள் வெற்றி வாகையுடன் விளங்குகிறாள்!

ஸ்ரீபுரபிந்துமத்யஸ்த சிந்தாமணி மந்திரஸ்த ஶிவாகார மஞ்சஸ்தித ஶிவகாமேஶாங்கஸ்தா - ''ஸ்ரீபுரம்'' என்ற ஸ்ரீ சக்ரத்தின் மையப் பகுதி ''பிந்து'' எனப்படுவதாகும். அதன் மத்தியில் ''சிந்தாமணி'' என்ற அரண்மனை. அதில் மங்களங்கள் யாவும் கொண்டிருக்கும் ''சிவாகாரமஞ்சம்.'' அதன் மீது ''சிவகாமேச்வரன்'' அமர்ந்திருக்க அவர் மடியில் ''சிவகாமேச்வரி''யாக அம்பாள் அமர்ந்திருக்கிறாள். அவள்தான் என் தாய் கமலாம்பாள். அவள் ஜய மங்களங்களுடன் ஸர்வோத் க்ருஷ்டமாய் விளங்கு கிறாள்!

அனுபல்லவி

(2) இரண்டாவது அருட்காட்சி - ''ஸ்ரீ ராஜராஜேச்வரீ'' (இரண்டாம் வேற்றுமையில் பதங்கள்)

ஸுகாரநநாத்யர்சித மஹாத்ரிபுரஸுந்தரீம் - வாராஹீ முதலான மாத்ரு கணங்களால் பூஜிக்கப்பட்டவள்-அவளே "மஹாத்ரிபுர ஸுந்தரீ"

ராஜராஜேச்வரீம் - அவளே "ராஜராஜேச்வரீ" எனப் பிரசித்த மானவள்.

ஸ்ரீகர ஸர்வானந்தமயசக்ரவாஸிநீம் - ஸ்ரீ சக்ரத்தின் மத்தியில் இருக்கும் "ஸர்வானந்தமயசக்ரம்" என்ற அனைத்து ஐசுவரியங்களையும் நல்கும் சக்ரத்தில் வீற்றிருக் கிறாள்.

ஸுவாஸிநீம் - (இயற்கை மணத்துடன்) தீர்க்க ஸுமங்களியாக இருப்பவள்.

சிந்தயே(அ)ஹம் - இப்படிப்பட்ட சீர்களுடன் விளங்கும் ஸ்ரீ கமலாம்பிகையை நான் தியானிக்கிறேன்.

(3) மூன்றாவது அருட்காட்சி - "பராபரா" (மூன்றாம் வேற்றுமையில் பதங்கள்)

திவாகர ஶீதகிரண பாவகாதி விகாஸ கரயா - சூரியன், சந்திரன், அக்னி முதலானோர்களுக்கு அவள் ஒளியை அளிக்கிறாள்.

பீகர தாபத்ரயாதி பேதன துரீணதரயா - அச்சுறுத்தும் தாபத்ரயங் களை (ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதை விகம்) சிதறடிக்கச் செய்வதில் தீவிரம் கொண்டவள்.

பாகாரிப்ப்ரமுகாதி ப்ரார்த்தித ஸுகலேபரயா - இந்த்ராதி தேவர்கள் ப்ரார்த்தனை செய்து கொண்டதின்பேரில் அவர்களுக்கு மிக அழகான திருவுருவத்தை (லலிதாம்பிகையாக) ப்ரத்யக்ஷமாகக் தோன்றியவள்.

ப்ராகட்ய பராபரயா - மேலான அனைத்திற்கும் மேலான ("பராபரா") தெய்வம் தானேதான் என்று பிரகடனப் படுத்தியவள்.

பாலிதோ தயாகரயா - இத்துணை சிறப்புகளுடன் விளங்கும் தயை புரியும் ஸ்ரீ கமலாம்பிகையினால் ரக்ஷிக்கப்பட்ட நான், அந்த "பராபரா" தேவியை மனதினால் தியானிக்கிறேன். (அனுபல்லவி)

சரணம்

(4) நான்காவது அருட்காட்சி - "சின்மாத்ரா" (நான்காவது வேற்றுமையில் பதங்கள்)

ஸ்ரீமாத்ரே - "ஸ்ரீமாதா" என்ற திவ்ய நாமத்துடன் விளங்கும் ஸ்ரீ லலிதாதேவீ - அன்னையே!

நமஸ்தே - உமக்கு நமஸ்காரம்!

சின்மாத்ரே - நீர் ஞானமயமாகவே விளங்குபவள்.

ஸேவித ரமா ஹரிகா விதாத்ரே - உம்மை லக்ஷ்மி, விஷ்ணு, ப்ரஹ்மா முதலானோர் ஸேவிக்கிறார்கள்: - இப்படிப்பட்ட "சின்மாத்ரா" தேவியான கமலாம்பிகைக்கு நமஸ்காரம்.

(5) ஐந்தாவது அருட்காட்சி -"பராதேவதா" (ஐந்தாம் வேற்றுமையில் பதம்)

வாமாதி ஶக்தி பூஜித பரதேவதாயா: ஸகலம் ஜாதம் - ஒன்பதாவது ஆவரணத்தின் சக்திதேவியர்களான வாமாதியர்களால் பூஜிக்கப்பட்ட "பரதேவதை"யிடமிருந்தே இந்த அனைத்து பிரபஞ்சமும் தோன்றியது.

(6) ஆறாவது அருட்காட்சி "மந்த்ர ரூபிணீ" (ஆறாவது வேற்றுமையில் பதம்)

காமாதி த்வாதஶபிருபாஸித காதி - - ஹாதி-ஸாதி மந்த்ர ரூபிண்யா: ப்ரேமாஸ்பத: - மன்மதன் முதலான பன்னிரண்டு சக்தி உபாஸகர்களால் (மனு, சந்த்ரன், குபேரன், லோபாமுத்ரா, மன்மதன், அகஸ்த்யர், நந்திகேச்வரர், ஸூர்யன், விஷ்ணு, ஷண்முகன், சிவன், துர்வாஸர் ஆகியவர்கள்) காதி-ஹாதி-ஸாதி முதலான

பன்னிரண்டு வித்யைகளால் உபாஸிக்கப்பட்ட "மந்த்ரரூபிணீ" கமலாம்பிகைக்கு நான் அன்புக்கு உரியவன்.

(7) ஏழாவது அருட்காட்சி - "குருகுஹ ஜனனீ" (ஏழாவது வேற்றுமையில் பதம்)

சிவகுருகுஹ ஜனன்யாம் ப்ரீதியுக்த மச்சித்தம் விலயது - சிவனாருக்கே குருவாக இருந்த முருகப்பெருமானிடம் அன்னையான கமலாம்பிகை யினிடத்தில், எனது மனது பரமப்ரீதியுடன் லயமடைந் திருக்கட்டும்.

(8) எட்டாவது அருட்காட்சி "ப்ரஹ்ம மய ப்ரகாஶினீ" (எட்டாவது வேற்றுமையில் பதம்).

ப்ரஹ்ம மய ப்ரகாஶினி, நாமரூப விமர்ஶினி, காமகலா ப்ரதர்ஶினி, ஸாமரஸ்ய நிதர்ஶினி - ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ஜ்யோதியுடன் பிரகாசிப்பவள், பெயர்கள்- உருவங்கள் கொண்ட இந்த நாம-ரூப பிரபஞ்சத்தை விளங்க வைப்பவள், காமகலா என்ற ஸ்ரீவித்யா உபாஸனாமூர்த்தியாக இருப்பவள், அனைத்து ஜீவராசிகளிடமும் சமரஸபாவம் கொண்டவள்- இப்படிப்பட்ட சிறப்புகளுடன் கூடிய ஸ்ரீ கமலாம்பிகையே! நீர் வெற்றியுடன் விளங்குகிறீர். (பல்லவி வாக்யத்துடன் தொடர்பு கொள்ளவும்).

கீர்த்தனத்தின் விசேஷ பலன்கள்

அடியார்களுக்கு எதிலும் ஜயம் ஏற்படும். அம்பாளின் அருள் வடிவங்களில் மனம் இன்பம் கொள்ளும். மந்த்ர சித்திகள் கைகூடும். வாழ்க்கையே ஸர்வானந்த மயமாக இருக்கும்.

★ ★ ★

13. மங்களகீர்த்தனம்



திருமீயச்சூர் ஸ்ரீ லலிதாம்பா

"ஸ்ரீ கமலாம்பிகே...."

"श्री कमलाम्बिके"

(मङ्गळकीर्तनम्)

।। श्रीरागे खण्डजाति एकताळेन गीयते ।।

पल्लवी

श्री कमलाम्बिके शिवे पाहिमां ललिते
श्रीपतिविनुते सितासिते शिवसहिते ।। श्री ।।

समष्टिचरणम्

राकाचन्द्रमुखी रक्षितकोलमुखी
रमावाणी सखी राजयोगसुखी

शाकम्भरि शातोदरि चन्द्रकलाधरि
शंकरि शंकर–गुरुगुह–भक्तवशंकरि
एकाक्षरि भुवनेश्वरि ईश–प्रियकरि
श्रीकरि सुखकरि श्रीमहात्रिपुरसुन्दरि ।। श्री ।।

ஸ்ரீ கமலாம்பிகே

இந்த தொடர் கீர்த்தனங்களில் முடிவில் மங்களா சரணமாக, தன்னை ரக்ஷித்தருளும்படி கமலாம்பிகையை வேண்டிக் கொண்டு இந்த க்ருதியை ஸ்ரீ தீக்ஷிதர் இயற்றியிருக்கிறார். (முந்தைய கீர்த்தனற்றின் தொடர்ச்சியாக இங்கே எட்டாவது வேற்றுமையில் பதப்ரயோ கங்கள் செய்யப்பட்டிருக்கின்றன)

"ஸ்ரீ கமலாம்பிகே...."
(மங்களகீர்த்தனம்)

(ஸ்ரீராகத்தில் ஏகதாளத்துடன் பாடப்படுவது)

பல்லவி

ஸ்ரீ கமலாம்பிகே ஶிவே பாஹிமாம் லலிதே
ஸ்ரீபதிவிநுதே ஸிதாஸிதே ஶிவஸஹிதே ॥ ஸ்ரீ ॥

ஸமஷ்டிசரணம்

ராகாசந்த்ரமுகி ரக்ஷிதகோலமுகி
ரமாவாணீ ஸகீ ராஜயோகஸுகி

மத்யமம்

ஶாகம்பரி ஶாதோதரி சந்த்ரகலாதரி
ஶங்கரி ஶங்கர குருகுஹ பக்தவஶங்கரி
ஏகாக்ஷரி - புவநேஶ்வரி - ஈஶப்ரியகரி
ஸ்ரீகரி-ஸுககரி-ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி ॥ ஸ்ரீ ॥

பதவுரை

பல்லவி

ஸ்ரீபதிநுதே - *விஷ்ணுவினால் துதிக்கப்பட்டவளே!*

ஸிதாஸிதே - *வெண்மை நிறத்திலும் கருமை நிறத்திலும் இருப்பவளே! (அம்பிகை வெண்மை நிறத்தில் இருக்கும் போது "கௌரி" என்றும் கருமை நிறத்தில் இருக்கும் போது "காளி" என்றும் பெயர்).*

ஶிவஸஹிதே - சிவனுடன் உடனுறைந்திருப்பவளே!

ஶிவே - மங்கள ஸ்வரூபிணியே!

லலிதே - இனியவள் என்பதினால் "லலிதா" என்ற புகழ்ப்பெயர் பெற்றவளே!

ஸ்ரீ கமலாம்பிகே - ஸ்ரீ கமலாம்பிகையே!

பாஹி மாம் - என்னை ரக்ஷித்தருள்வாயாக!

ஸமஷ்டி சரணம்

ராகா சந்த்ரமுகி - முழு நிலவையொத்த திருமுகம் படைத்தவளே!

ரக்ஷிதகோலமுகி - வாராஹீ என்ற மாத்ரு தேவதைக்கு எஜமானியே! வாராஹீ என்பவள் அம்பிகையின் சேனைத்தலைவியும் ஆவாள்.

ரமா வாணி ஸகி - லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய தேவியர்களைத் தோழிகளாகக் கொண்டவளே!

ராஜயோகஸுகி - ராஜயோகத்தின் ஆனந்தத்தை உடையவளே!

ஶாகம்பரி - (பஞ்சம் வந்தபோது) பயிர்-பச்சைகளை ஜீவராசிகளுக்கு அளித்தவளே!

சாதோதரி - சிறிய இடையையுடையவளே!

சந்த்ரகலாதரி - சந்திரகலையை ஆபரணமாக நெற்றியில் சூடியவளே!

ஶங்கரி - சங்கரனின் அன்பு மனைவியே!

ஶங்கர, குருகுஹ பக்த வஶங்கரி - சங்கரன், முருகன் ஆகியோரின் பக்தர்களைக் கவர்ந்தவளே!

ஏகாக்ஷரி - "ஓம்" என்ற ஓரெழுத்து மந்த்ர ஸ்வரூபிணியாக இருப்பவளே!

புவனேஶ்வரி - அகிலங்கள் யாவற்றிற்கும் நாயகியே!

ஈசப்ரியகரி - ஈசனுக்கு பிரியமானவளே!

ஸ்ரீகரி - ஐசுவரியங்களைத் தோற்றுவிப்பளே!

ஸுககரி - ஆனந்தத்தை அருள்பவளே!

ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரி - ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரி தேவியே!

கமலாம்பிகே பாஹிமாம் - கமலாம்பிகையே! என்னைக் காப்பாற்று (பல்லவியுடன் முடிவு).

கீர்த்தனத்தின் பலஶ்ருதி

அம்பிகையின் ரக்ஷை எப்பொழுதும் அடியார்களுக்கு ஒரு கவசமாக இருக்கும். முப்பெரும் தேவியர்களான லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி ஆகியோர்களின் கடாக்ஷம் ஏற்படும். ஐசுவரியங்கள் கைகூடும்.

நவாவரணத்தின் மங்கள கீர்த்தனம் ஸம்பூர்ணம்

★ ★ ★

ப்ரத்யேக நன்றி

ஒன்பது ஆவரணங்களின் சக்ரங்களை எமக்கு வரவழைத்து தந்த கல்லிடைக்குறிச்சி வீணை **திரு. எஸ். வேங்கடேஶன்** (Music Books Publishers, Ph. 24943428) அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றி.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய

ஸ்ரீ கமலாம்பா நவாவரண கீர்த்தனைகளின் அற்புதப் பலன்கள்

"நவரத்னமாலா"
ஸ்ரீ M.K. வெங்கடராமன், M.A

இவர் தேர்ச்சி பெற்ற ஸம்ஸ்க்ருதப் பண்டிதர். பல ஆண்டுகளாக ராமாயணம், பாகவதம், நாராயணீயம், கீதை, விவேக சூடாமணி ஆகியவைபற்றிப் பிரவசனம் செய்து வருகிறார். பல ஆன்மிக வகுப்புகளையும் நடத்தி வருகிறார். இவர் பல நூல்களின் ஸங்க்ரஹங்களையும், தமிழாக்கங்களையும், விளக்கவுரைகளையும் இயற்றியிருக்கிறார். இவருடைய உரைநடை பாமர ரஞ்சகமாகவும் பண்டித ரஞ்சகமாகவும் இருப்பதாகப் பலர் பாராட்டியுள்ளனர்.

இவர் இயற்றி லிப்கோ பதிப்பித்துள்ள பிற நூல்கள் - ஸுந்தர காண்ட நவரத்ன மந்த்ரமாலா (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு), ஸ்ரீமத் பாகவத ரஸாம்ருதம் (தமிழ்), விஷ்ணு புராணம் (தமிழ்) நாராயணீயம் (ஸம்ஸ்க்ருதம், தமிழ்), ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம் (ஸம்ஸ்க்ருதம், தமிழ்),

643

LIFCO PUBLISHERS PVT. LTD.
New No. 36, North Road,
West C.I.T. Nagar, Chennai - 600 035
Ph.No. : 24341538, 24336467, Fax : 044-24310659
E-Mail : info@lifcobooks.com ❖ Website : www.lifcobooks.com